மொழிபெயர்ப்பு

நிதி ஆணைக்குழு

அதி மேதகு ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் - 2021

(இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (4) இன் பிரகாரம்)

செப்ரெம்பர் 2020

මුදල් කොමිෂන් සභාව
(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 "ඡ" ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)
நிதி ஆணைக்குழு
(அரசியலமைப்பின் 154 "ண" ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டது)
FINANCE COMMISSION
(Established under Article 154 "R" of the Constitution)

03, සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 03, சரண மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
03, Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka.

මගේ අංකය / எனது இல. / My No. FC/PRP/08/01/2020

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2020.09.30

அதி மேதகு கோட்டாபய ராஜபக்ச
சனாதிபதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
சனாதிபதி செயலகம்
கொழும்பு – 01

அதி மேதகு சனாதிபதி,

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 13வது திருத்தச் சட்டத்தின் 154R (4) உறுப்ப்ரிமைக்கு அமைவாக மாகாண சபைகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் கொடையினை பகிர்ந்தளிப்பது சம்பந்தமான பரிந்துரைகளை வழங்குவது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்.

2021 ஆம் ஆண்டிற்கான மகாணங்களின் பயன்பாட்டிற்காக வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கப்பட வேண்டிய நிதியைப் பகிர்வது தொடர்பாக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்.

தங்களின் மரியாதைக்குரிய

U.H. பலிஹக்கார
தலைவர்
நிதி ஆணைக்குழு

සභාපති / தலைவர் / Chairman (+94)011 2866724
ලේකම් / செயலாளர் / Secretary (+94)011 2866824
කාර්යාලය / அலுவலகம் / Office (+94)011 2866747
ෆැක්ස් / தொலைநகல் / Fax (+94)011 2866671 (+94)011 2866679
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail info@fincom.gov.l
www.fincom.gov.lk

பொருளடக்கம்

பக்க எண்

பொருளடக்கம்		I
இணைப்புக்களின் பட்டியல்		ii
அறிக்கை சுருக்கம்	-	1
01. அறிமுகம்	-	7
1.1. பின்னணி	-	7
1.2. நிதி ஆணைக்குழுவின் கட்டளைச் செயல்பாடு	-	8
1.3. உலகளாவிய தோற்றப்பாடும் இலங்கையின் நிலைமையும்	-	9
1.4. சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி	-	9
1.5. தேசிய கொள்கையும் புதிய அரசாங்கத்தின் செல்நெறியும்	-	10
02. தேசிய வரவு செலவுத் திட்டமும் மாகாண சபைகளிற்கான கொடைகளும்	-	13
2.1. நிதிஅதிகார பகிர்வு தொடர்பாக அரசியலமைப்பு ஏற்பாடு	-	13
2.2. மேலிருந்து கீழான அதிகார பகிர்வும் கிடைமட்ட சமநிலையும்	-	14
2.3. மாகாணங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிதி ஒதுக்கீடு	-	16
2.4. சமச்சீரான அபிவிருத்திக்கு மாகாணங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான நிதியை ஒதுக்குதல்	-	14
2.5. தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்கான அரச கொடைகள்	-	18
03. மாகாணங்களது சமூக பொருளாதார நிலைமையும் சேவை வழங்கல்களும்	-	18
3.1. மாகாணங்களது சமூக பொருளாதார நிலைமைகள்	-	21
3.2. மாகாண சபைகளின் சேவை வழங்கல்	-	21
04. மாகாண நடுத்தர காலஅபிவிருத்தி திட்டமும் மாகாண சபைகளின் செலவு தேவைகளும்	-	23
4.1. மாகாண நடுத்தரகால அபிவிருத்தி திட்டமும் மூலதன பாதீடும்	-	23
4.2. மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவு தேவைகள்	-	23
05. மாகாண சபைகளுக்கான மூலதன மற்றும் மீண்டெழும் நிதி கொடைகளுக்கான தேவைகளை மதிப்பீடு செய்தல்	-	25
5.1. நிதி கொடைகளுக்கான தேவைகளை மதிப்பீடு செய்தல் - மூலதனம்	-	25
5.2. நிதி கொடைகளுக்கான தேவைகளை மதிப்பீடு செய்தல் – மீண்டெழும் செலவு	-	25
06. 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டிலிருந்து மாகாண சபைகளுக்கான பரிந்துரைகளும் நிதிப் பகிர்வும்	-	28
6.1. மூலதன கொடைக்கான பரிந்துரைகளும் நிதிப்பகிர்வுகளும் - 2021	-	28
6.2. மீண்டெழும் செலவீன நிதிக்கான பரிந்துரைகளும் நிதிப்பகிர்வுகளும் - 2021	-	29
6.3. தேசிய பாதீடிலிருந்து மாகாண சபைகளுககாண கொடையை பரிந்துரைத்தல்	-	29
07. சமச்சீரான பிராந்திய அபிவிருத்திக்கான பரிந்துரைகளில் உள்ள வரையறைகள்	-	31
08. கொள்கைப் பரிந்துரைகள்	-	33
இணைப்புக்கள்		

இணைப்புக்களின் பட்டியல்

இணைப்பு-01: 2020, 2021 ஆம் ஆண்டுகளில் மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட கொடைகளுக்கான தேவைகள்

இணைப்பு -02 : 2021 ஆம் ஆண்டுக்கான மூலதன கொடை பகிர்வு சூத்திரம், முறை மற்றும் தரவு மாறிகள்

இணைப்பு-03: 2020, 2021 ஆம் ஆண்டுகளின் கொடைகளிற்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள்

இணைப்பு -04: 2020, 2021 இல் துறைகளுக்கான மதிப்பீட்டாய்வு செய்யப்பட்ட மாகாண மூலதனகொடைகளின் பகிர்வுகள்

இணைப்பு-05 : 2020, 2021 இல் அனுமதிக்கப்பட்ட மொத்த ஆளணி மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிக்கொடை

இணைப்பு -06 : 2020 , 2021 ஆம் ஆண்டின் வருமான மூலங்கள் வரியாக மாகாண வருமான சேகரிப்பு

இணைப்பு -07: உப தேசிய மட்டதிற்கான நிதிப் பாய்ச்சல்கள்

இணைப்பு -08: 2012-2018 களில் பெயரளவிலான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி

அறிக்கை சுருக்கம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் உறுப்புரை 154 R பிரிவின் கீழ் 1987 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழு நிறுவப்பட்டது. அரசியலமைப்பு ஆணைக்கு அமைவாக, நிதி ஆணைக்குழு மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் இருந்து போதுமான நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை செய்கிறது

அதன்பிரகாரம், நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களுடன், மாகாண சபைகள் வருடாந்த தேவைகளைத் தயாரித்து, தேசிய பாதீட்டிலிருந்து மாகாண சபைகளுக்கான கொடைகளை கோரி தங்கள் நிதித் தேவைகளை சமர்ப்பிக்கின்றன. நிதி ஆணைக்குழு மாகாண நிறுவனங்களுடன் தொடர் சந்திப்புகளை மேற்கொண்டிருந்ததுடன் ஏனைய பங்குதாரர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளில் நிபுணத்துவம் உடையவர்களுடனும் ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது. மேலும், நிதி ஆணைக்குழுவானது ஒவ்வொரு மாகாண சபைகளதும் பிரதம செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளை அழைத்து தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பங்குபற்றலுடன் வருடாந்த தேவை மதிப்பீட்டை முடிவு செய்திருந்தது.

நிதி ஆணைக்குழு மாகாண தேவைகளை மதிப்பீடு செய்து தற்போது அதன் பரிந்துரைகளை அதிமேதகு ஜனாதிபதி அவர்களிற்கு சமர்பிக்கின்றது. இப்பரிந்துரைகளானது: மாகாணங்களிடையே நியாயபூர்வமான முறையில் நிதி பகிர்வு செய்வதற்கான தத்துவங்களுடன் கூடிய மாகாண சபைகளுக்கான அரசாங்க கொடைகள் வழங்குதலுக்கான பரிந்துரை என்பதுடன் நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கும் , உப தேசிய மட்டத்தில் பொது முதலீட்டு திட்டம், சேவை வழங்கல்கள் என்பவற்றை வினைத்திறனுடன் அமுலாக்குவதற்குமான கொள்கைப் பரிந்துரைகள் என்பனவற்றையும் உள்ளடக்குகின்றன.

இது சம்பந்தமாக நிதி ஆணைக்குழுவானது புதிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட செயல் நெறிகளை கவனத்திற் கொண்டதுடன், குறிப்பாக 2020 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைகள் தொடர்பில் அதிமேதகு ஜனாதிபதியால் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் நாள் மேற்கொண்ட அமைச்சரவை தீர்மானங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன.

குறுப்பிட்ட அமைச்சரவை பத்திரத்தில், அரசாங்க அபிவிருத்தி கொள்கை கட்டமைப்பு, பொதுச் செலவு முகாமைத்துவம், மாகாண நடுத்தர கால அபிவிருத்தித் திட்டம் மற்றும் மாகாண சபைகளின் செலவினங்களின் செயல்திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாகாண சபைகளின் நிதித் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் மாகாணங்களிடையே மூலதன நிதியை பகிர்ந்தளிப்பதில் பரிந்துரைகளானது புள்ளிவிவர முறை அடிப்படையினை கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் அமைச்சரவை பத்திரத்தினூடாக பின்வருவனவற்றை அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்;

- மாகாணங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சுபீட்சத்தின் குறிபிடத்தக்க மாற்றங்கள்
- மீண்டெழும் செலவீனங்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவான வருமான உருவாக்கம்
- மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை
  மாகாண சபைகளால் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சி திட்டத்தின் நிதி ஒதுக்கீடு தொடர்பில்
- மத்திய அமைச்சுக்கள் மூலமாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற இரட்டிப்பு தன்மை
- தனியார் துறை பங்களிப்பு காரணமாக முன்னேற்றங்களை கொண்டுள்ள துறைகளில் மேலும் விரிவான மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

மேலும், அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பின்வரும் தனது அவதானிப்புகளையும் சுட்டிக்காட்டியிருந்தார்;

- புள்ளிவிவர தரவுகளை உயர்த்துவதை விட சேவை வழங்கல்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு சரியான முறையில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

- நிதி ஒதுக்கீடுகளில் இரட்டிப்புக்களை தடுக்க தேவையான நடவடிக்கைகள் விரும்பத்தக்கது.
- மாகாண வருமான உருவாக்கத்தின் அளவை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் வருமானத்திற்கான புதிய வழிவகைகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துதல்.

அரசிறை அதிகார பகிர்வும் சம அபிவிருத்தியும்

மாகாண சபைகளின் பட்டியல், ஒதுக்கப்பட்ட பட்டியல் இணைந்து செயலாற்றுகின்ற ஒத்தியங்கும் பட்டியல் என மூன்று பட்டியல்களின் கீழ் ஒன்பதாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயப்பரப்புக்களின் அடிப்படையில் உப தேசிய மட்டங்களில் பொது முதலீடு மற்றும் சேவை வழங்கல்கள் என்பவை மத்திய அரசு மற்றும் உள்ளூர் அதிகார சபைகளையும் உள்ளடக்கிய மாகாண சபைகள் என்பவற்றின் கீழ் உள்ள செலவு முகவர்களால் மேற்கொள்ளப்படுகிறது. நிதி ஆணைக்குழு அபிவிருத்தி செயல்பாடுகளின் நன்மைகளை அனைவருக்கும் பகிர்ந்து கொள்ளும் இடவமைவுப் பரம்பலும் நிலைபேறான நன்மைகளும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய முழுமைத்தன்மை ஆகிய இரு முக்கிய கொள்கைகளின் வழி சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை கவனத்தில் கொள்கிறது.

சமூக பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் முன்னேற்றம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் உள்ள மாகாணங்களின் நிலையை தீர்மானிக்கும்போது, ஒன்பது மாகாணங்களை மூன்று பிரிவுகளிற்குள் வேறுபடுத்தலாம். மேல் மாகாணம் எப்போதுமே மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க இடைவெளியுடன் சிறப்பான நிலையிலிருப்பதை காணலாம். ஊவா, சப்ரகமுவ, வட மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு ஆகிய ஐந்து மாகாணங்கள் தேசிய சராசரியை விட குறைந்து மிகக் கீழ் நிலையில் உள்ளன. ஏனைய மூன்று மாகாணங்களான மத்திய, வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணங்கள் ஒரு மிதமான மட்டத்தில் உள்ளன, ஆனால் மேற்கு மாகாணத்திற்கு மிகவும் கீழேயே உள்ளன.

மாகாண ஏற்றத்தாழ்வுகள்

சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை இலக்காக கொண்டு பல்வேறு உபாயங்களும் திட்டங்களும் அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்டுள்ள போதிலும் மாகாணங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்றத்தாழ்வுகளையும் வருமான சமமின்மயினையும் நாடு இன்னும் அனுபவித்து வருகிறது. அவ்வாறே மாகாணங்களிற்குள்ளேயும் பின்தங்கிய பிரதேசங்கள் காணப்படுகின்றன. பின்தங்கிய பிரதேச மக்களுக்கு ஒப்பிடத்தக்க சேவைகளை உறுதி செய்வதில் பொது முதலீட்டில் கவனம் செலுத்த வேண்டும்

மாகாணங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக-பொருளாதார குறிகாட்டிகள்

மாகாணங்கள்	நிலப்பரப்பு 2018 (ச.கி.மீ)	நடு ஆண்டு சனத்தொகை 2018 (000)	மாகாண மொ. உ. உற்பத்தி 2018 (%)	சராசரி மாத தலா வருமானம் 2016 (ஒரு வீட்டிற்கு ஒரு நபருக்கு)	மாகாண சுயீட்ச சுட்டெண் 2018	மனித மூலதன சுட்டென் (%)	பல்கலைக்கழக அனுமதிகளின் எண்ணிக்கை 2019	வேலையின்மை விகிதம் 2019 (%)	வறுமை தலைச் சுட்டெண் 2016
மேற்கு	3,593	6,129	38.5	14,400	1.301	62	8,432	3.1	1.7
மத்திய	5,575	2,750	11.8	9,890	0.490	54	3,232	5.4	5.4
தெற்கு	5,383	2,637	10.0	11,253	0.470	63	4,316	5.7	3.0
வடக்கு	8,290	1,131	04.1	8,434	0.399	52	2,105	5.6	7.7
வட மேற்கு	7,506	2,536	11.0	11,420	0.456	59	3,308	3.6	2.7
வடமத்தி	9,741	1,366	05.7	11,248	0.256	57	1,689	4.5	3.3
ஊவா	8,335	1,364	05.7	10,139	0.201	55	1,813	5.2	6.5
சப்ரகமுவ	4,921	2,047	07.6	9,711	0.341	59	2,866	4.3	6.7
கிழக்கு	9,361	1,710	05.6	8,261	0.168	51	2,340	6.0	7.3

மாகாணங்களின் தேவைகளும் அவற்றின் மதிப்பீடும்

மாகாண சபைகள் தமது வருடாந்த தேவைகளையும் மூலதன மற்றும் மீண்டெழும் செலவு சார்ந்த கோரிக்கைகளையும் தயாரித்து தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்குரிய கொடைகளிற்கான கோரிக்கையுடன் நிதி ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கின்றன. ஒன்பது மாகாண சபைகளும் 2021 ஆம் அண்டிற்கான சமர்ப்பித்த மொத்த செலவுத் தேவைகளாக மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடை (மூலதனம்) ரூ. **133,205** மில்லியங்களும் மற்றும் தொகுதி கொடைகளிற்கு (மீண்டெழும்) ரூ. **389,836** மில்லியன்களும் என அமைந்திருந்தன.

ஒவ்வொரு மாகாணத்தினதும் மூலதன தேவைகளை நிதி ஆணைக்குழு, தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் கூட்டாக இணைந்து அந்தந்த மாகாண அதிகாரிகளின் பங்குபற்றளுடன் ஒவ்வொரு மாகாணசபைகளினதும் துறைசார் திட்டங்கள், அரச செயல் நெறிகள், பதீட்டு மட்டுப்படுத்தல்கள் மற்றும் மாகாண அபிவிருத்தி முன்னுரிமைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாகாண சபைகளின் மீண்டெழும் செலவு தேவைகள் நிதி ஆணைக்குழுவால் தேசிய பாதீட்டு திணைக்களத்துடன் இணைந்து அந்தந்த மாகாணசபை அதிகாரிகளின் பங்குபற்றலுடன் ஒவ்வொரு மாகாண நிர்வாக கட்டமைப்பிற்கும் தேவையான அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் பிற செலவினங்களை கருத்தில் கொண்டு மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டது..

ஒவ்வொரு மாகாண சபையின் தேவைகளும் அரசாங்க வரவு செலவு திட்ட மட்டுப்படுதல்களிற்கு உரிய கவனம் செலுத்தி மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டு மூலதன கொடைகளுக்கு ரூ **77,950** மில்லியன்களும் தொகுதி கொடைகளுக்கு ரூ **361,692** மில்லியன்களாகவும், (நிதி ஆணைகுழுவிற்கு இன்னும் கிடைக்கப் பெறாத மதிப்பிடப்பட்ட அரச வருவாய் மாற்றல்களை குறைப்பதற்கு முன்பு) மதிப்பீட்டாய்வு இறுதி செய்யப்பட்டன .

கொடைகளிற்கான பரிந்துரைகள்

2021 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்ககான அரசாங்க கொடைகளாக பின்வருவனவற்றை நிதி ஆணைகுழு பரிந்துரை செய்கிறது.

I. அந்தந்த மாகாணங்களின் நடுத்தர கால அபிவிருத்தி திட்டங்கள் மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு அமைவாக பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களின் கீழ் **23** துறைகளில் உள்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டுக்கு சிறப்பு கவனம் செலுத்தி மூலதன மேம்பாட்டு இடையீடுகளுக்கு நிதியளிப்பதற்கான மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடையாக **(PSDG)** மொத்தம் ரூ. **70,400** மில்லியன்கள்.

II. பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காக மூலதன செலவீனங்கள் சார்ந்த நிதியளிப்புகளிற்கு பிரமாண அடிப்படையிலான கொடையாக ஏற்று கொள்ளப்பட்ட நிதி கட்டமைப்பிற்குள் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளுக்கு மாகாண சபைகள் தனது விருப்பப்படி ஒதுக்கீடு செய்ய மொத்தம் ரூ. **7,550** மில்லியன்கள் ஆகும் .

III. மாகாண சபைகளின் வருமான செயல்திறனை மேம்படுத்துவதற்காக வருவாய் செயல்திறன் மானியமாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ள மொத்தம் ரூ.**3,000** மில்லியன்கள் .

IV. உளூராட்சி சபைகளிற்கான மாற்றல்கள் மற்றும் மூலதன சொத்துக்களை பராமரித்தல் உட்பட பொது சேவை வழங்கலை தக்கவைத்து மேம்படுத்துவதற்காக மாகாண சபைகளின் மீண்டெழும் செலவுத்தேவகளை பூர்த்தி செய்வதற்கு தொகுதி கொடையாக, ரூ. **340,629** மில்லியன்கள். இது ரூ. **21,062** மில்லியன் மதிப்பிடப்பட்ட பகிர்ந்தளிக்கப்பட்ட மாகாணசபை வருவாய்களை கழித்த பின்னரான தொகையாகும் (அரசிறை கொள்கை திணைக்களத்தால் தொடர்புடைய தகவல்கள் இன்னும் இறுதி செய்யப்படாததால் மாகாண சபைகளுக்கு மதிப்பிடப்பட்ட அரசாங்க மாற்றல்கள் இதில் கழிக்கப்பட வில்லை).

பரிந்துரைகள் செய்வதிலான வரையறைகள்

அதிகாரப் பகிர்வு கட்டமைப்பிற்கு அமைவாக ஒரு சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு மாகாணங்களுக்கு போதுமான நிதியை நிதி ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. மாகாண சபைகள் தமது சேவை வழங்கல்களிற்கான மூலதன நிதியை அ) தேசிய வரவுசெலவு திட்டத்திலிருந்து பெறும் கொடைகள் ஆ) மத்திய அமைச்சுக்களிலிருந்து ஒதுக்கீடு மற்றும் இ) விஷேட திட்டங்களின் மாகாண அங்கங்களிற்கான ஒதுக்கீடு போன்ற வடிவங்களில் பெறுகின்றன. எவ்வாறாயினும் இதில் கவனத்துக்குரியது யாதெனில்;

- அடுத்துவரும் ஆண்டிற்கான அரசாங்க வரவு செலவு திட்டத்தின் மொத்த மூலதன பாதீட்டு தொகை பற்றிய அடிப்படை எதுவுமின்றியே நிதி ஆணைகுழுவானது. மாகாண சபைகளிற்கான மூலதன கொடைகளை மதிப்பீடு செய்வதுடன் பரிந்துரைகளை செய்யவேண்டியுள்ளது .

- பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒத்தியங்கும் விடயங்களிலான மாகாண சபைகளின் சேவை வழங்கல்கள் பல்வேறுபட்ட வழிகளில் நிதியீட்டம் செய்யப்படுகிறது. மாகாண சபைகளிற்கான

மூலதன கொடைகளின் மதிப்பீடும்ளும் பரிந்துரைகளும் மாகாண சபைகளினது அல்லது மாகாணங்களினது மொத்த தேவைகளாக அமையாது.

- மூலதன தேவைகள் ஒரு ஒழுங்கு முறைக்குட்பட்ட வகையில் மதிப்பீடு செய்யப்பட்டு மூலதன நிதியீட்டதிற்கு சமர்பிக்கப்பட்டிருந்தலும்கூட அரச பாதீட்டு மட்டுபாடுகள் காரணமாக நிதி ஆணைக்குழுவினால் மதிப்பீடு செய்த முழுத்தொகையும் பரிந்துரைக்க முடியவில்லை .

- சமச்சீரானதும் உள்ளார்ந்ததுமானதுமான பிராந்திய அபிவிருத்தியை இலக்காக கொண்டு அனைத்து நிதி வழங்களையும் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த திட்டமிடல் செயல்முறையுடன் அனைத்து விடயங்களையும் நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு தேவை மதிப்பாய்வு அவசியமாகிறது.

கொள்கைப் பரிந்துரைகள்

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பொது முதலீட்டு திட்டத்தை திறம்பட செயல்படுத்துதல் மற்றும் உப தேசிய மட்டத்தில் சேவை வழங்கல்கள் என்பவற்றுடன் நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைவதற்கான கொள்கைப் பரிந்துரைகள் அடங்குகின்றன. தேசிய பாதீடிட்ற்கான நிதி ஒதுக்கீடுகள்,சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி, நிறுவனங்களுகிடயிலான ஒருங்கிணைப்பு,பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் சேகரிப்புக்கள் மற்றும் தனியார் துறை பங்களிப்புக்கள் என்ற பார்வையில் பின்வரும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

- செலவின பாதீட்டு நிதி ஒதுக்கீடுகள் ஒரு முழுமையான சேவை வழங்கல்கள் முறைக்கமைவாக மாகாணசபைகள் அவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒத்தியங்கும் விடயங்களில் சேவை வழங்கலின் தேவைகளை ஈடுசெய்வதற்கு போதியளவிலான நிதியினை ஒதுக்குதல் வேண்டும். அதற்கேற்ப நிதி ஒதுக்கீட்டில் இரட்டிப்பு தன்மையை தவிர்க்கும் வழிகளில் மாகாண சபைகளை விசேட செலவு அலகாக கருதி பாதீட்டு தலைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

- சம அபிவவிருத்தியினை பேணி இரட்டிப்புக்களை தவிர்த்து குறித்த வருடத்திற்கு மாகாண /மாவட்ட ஒன்றிணைந்த நடைமுறை திட்டத்தினை தயரிப்பதற்கேதுவாக மத்திய அமைச்சுக்கள் ஒத்தியங்கும் பட்டியல் விடயங்களில் அபிவிருத்தி தொடர்பான தமது நிதியளிப்பினை முன்கூட்டியே ஒதுக்கீடு செய்தல் வேண்டும். தேசிய திட்டமிடல் திணைக்களம் ஒருங்கிணைந்த அணுகுமுறையில் ஒரு பொதுவான கட்டமைபினூடாக பிரதேச ரீதியிலான சமமின்மையை அடையாளங்கண்டு உப தேசிய மட்டங்களிற்கான நிதிவள ஒதுக்கீடுகளில் சமநிலையினை உறுதிபடுத்த வேண்டும் .

- உள்ளூராட்சி சபைகளின் சேவை வழங்ளிற்காக ஒரு விசேட மூலதன கொடையும் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு தொகையும் தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து வழங்குவது கவனத்தில் கொள்ளப்படலாம்.

- விசேட கருத்திட்டங்கள் மற்றும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களின் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களிலான மாகாண கூறுகளின் அமுலாக்கம் மாகாணசபைகளிற்கு போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு அவற்றினூடாக நடைமுறைப் படுத்துதல் வேண்டும்.

- மாகாணங்களுக்குள்ளே சமமான பிராந்திய அபிவிருத்தியை அடைந்துகொள்ளும் வகையில் பின்தங்கிய பிரதேசங்களில் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் கிராமப்புறங்களுக்கு ஒபீட்டளவிலான சேவைகள் , சமூக பொருளாதார முனேற்றம் என்பவற்றிற்காக சேவை வழங்கும் நிறுவனங்களினால் பொருத்தமான அபிவிருத்தி ஏற்பாடுகள் இனம்காணபடல் வேண்டும்.

- மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் வருமான உருவாக்கங்களும் நிதி சேகரிப்புக்களுக்கான புதிய மார்க்கங்களும் உபதேசிய மட்ட சபைகளளை பலப்படுதுவதனூடாக தங்கியிருக்கும் தன்மையையும் அரச நிதியில் அழுத்தமேற்படுத்துவதையும் குறைதல் வேண்டும்.

அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளிட்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான மூலங்களிலிருந்து மாகாண சபைகள் வருமான உருவாக்கங்களை மேற்கொள்ள அரசாங்கம் இடமளிப்பதுடன் அரசாங்கத்தால் சேகரிக்கப்பட்ட வருவாய்களிளிருந்து போதுமான தொகையை மற்றல்களாக வழங்கவேண்டும் .

- மாகாண சபைகளிற்குரிய துறைகளிற்கு ''பிராந்திய அபிவிருத்தி'' என்றதொரு பாதீட்டு வரிசையில் நிதி ஒதுக்கீடு செய்வதானது மாகாண சபைகளின் சேவை வழங்கலின் தேவைபாடுகளை குறைத்து மதிப்பிடுவதாக அமைகிறது. கல்வி சுகாதாரம் போன்ற துறைகளிற்கான போதிய நிதி ஒதுக்கீடுகள் மாகாண சபைகளிற்கு உள்ளடக்கப்பட வேண்டும்

- பொது முதலீட்டினூடாக வளங்களின் ஒதுக்கீடு குறிப்பிட்ட துறைகள் பிராந்தியங்களில் சாத்தியமகவுள்ள தனியார்துறை முதலீடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு துறைகள் மற்றும் பிராந்தியங்களில் காணப்படும் சாத்தியமான தனியார் துறை முயற்சிகளை பொது முதலீடுகளின் வழிப்படுதளுக்கு முன்னராக மதிப்பீடாய்வு செய்வது மிகவும் பொருத்தமானதாக அமையும் .

- தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் உள்ள நிறுவனங்கள் பல்வேறு வழிகளில் பொது நிதியை பெற்று சேவைகள் வழங்கல்களில் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றன. இவை தொடர்பில் திட்டமிடல், நிதி ஒதுக்கங்கள், மற்றும் அறிக்கையிடல் என்பவற்றில் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடிய ஒரு பொது கட்டமைப்பு பின்பற்றப்பட வேண்டும். சுமூகமான நிதிவளப்பாய்ச்சல்கள் மற்றும் உறுதியான அறிக்கையிடல் என்பவற்றுடன் கூடிய ஒரு வினைத்திறனுடைய அரச நிறுவனங்களிடையே நிதி உறவு தொடர்புகள் கட்டாயமானதாகிறது.

- தேசிய பாதீட்டில் அதிகரிகின்ற அழுத்தங்களை குறைக்கவும் கல்வி மற்றும் சுகாதார துறைகளில் சேவை வழங்கல்களின் வினைத்திறனை முன்நேற்றவும் விதிமுறையடிப்படயிளான பாதீட்டு முறை மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்

01. அறிமுகம்

1.1 பின்னணி

அரசியலமைப்பின் 13 வது திருத்தம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் என்பன மாகாண சபைகளுக்கான ஆளுகை செயல்முறை கட்டமைப்பை வழங்குகிறது. இந்த கட்டமைப்பும் அதனுடன் தொடர்புடைய நியதிச் சட்டங்கள் நிதியியல் விதிகள், அரச சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றுடன் இணைந்து செல்வது என்பது ஆழுகையின்முக்கியஅம்சமாகிறது.

அரசாங்க சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி அவற்றினது நடவடிக்கைகள் நடாத்தப்படுவதையும், பொதுப் பணம் பாதுகாக்கப்படுவது, சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் பயன்படுத்தி முறையாகக் கணக்கீட்டுக்கு உட்படுத்தி உறுதிசெய்வது மாகாண சபைகளது பொறுப்பாகும். மாகாண சபைகளுக்கான பாதீட்டு ஒதுக்கீடுகள் தொடர்பில் அரசிற்கு பரிந்துரைகளை செய்வதனூடாக நிதி ஆணைக்குழு தேவையான ஒத்துழைப்பை மாகாணசபைகளிற்கு வழங்குகிறது.

1.2 நிதி ஆணைக்குழுவின் கட்டளைச் செயல்பாடு

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது அரசியலமைப்பானது பதின்மூன்றாவது திருத்தத்துக்கமைவாக நிதி ஆணைக்குழு 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (3), (4) மற்றும் (5) பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி நிதிஆணைக்குழுவின் கட்டளை செயல்பாட்டு பொறுப்புகள் பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளது;

154R (3) அரசாங்கம் ஆணைக்குழுவினது பரிந்துரைகள் மற்றும் கலந்தாலோசனைகளுடன் மாகாணங்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான நிதியை வருடாந்த வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யும்.

154R (4) ஜனாதிபதிக்கு பின்வரும் விடயங்களிலில் பரிந்துரை செய்வது நிதி ஆணைக்குழுவின் கடமையாகும்.

அ) அரசாங்கத்தால் மாகாணங்களின் பயன்பாட்டுக்காக வருடாந்தம் வழங்கப்படும் அத்தகைய நிதிகள் தொடர்பாகவும் பல்வேறு மாகாணங்களுக்கிடையே அந்த நிதியினை பகிர்ந்து கொள்வது தொடர்பான நியமங்கள்

ஆ) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்

154R(5) நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் அத்தகைய கொள்கைகளை நிதி ஆணைக்குழு ஒழுங்கமைப்பதுடன் அதற்காக பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ளும் ;

அ) ஒவ்வொரு மாகாணத்தின் சனத்தொகை,

ஆ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமானம்,

இ) சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்துக்கொள்ள முன்னேற்றகரமான தேவைகள் மற்றும்

ஈ) ஒவ்வொரு மாகாணத்தினதும் தலா வருமான வேறுபாடுகளை குறைக்கவும் மகாணங்களிடையே உயர் தலா வருமானத்தை பேணுவதற்குமான முன்னேற்றகரமான தேவைகள்

அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (7) இன் பிரகாரம் நிதி ஆணைக்குழு சமர்ப்பிக்கின்ற ஒவ்வொரு பரிந்துரையையும் பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பி\ப்பதுடன் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் அறிவிப்பார்

அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (5) இன் பிரகாரம், நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்குடன் மாகாணங்களினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வருடாந்த பாதீடில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அரசிற்கு பரிந்துரைகளை வழங்குவதும் ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நிதி பகிர்வு செய்வதற்கான நியமங்கள் தொடர்பான பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு வழங்குவதும் நிதி ஆணைக்குழுவின் முக்கிய பணியாகும். இவ்வாறான செயல்முறையில், மாகாண நிதி தேவைகளை மதிப்பிடுவதற்கு நிதி ஆணைக்குழு மாகாணசபைகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

இதன் பிரகாரம், நிதி ஆணைக்குழு மாகாணங்களின் தேவைகளை மதிப்பாய்வு செய்து மாகாணங்களுக்கிடையே பகிர்வதற்கான நியமங்களை ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்கிறது.

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பின்வருவன அடங்கும்: நியாயமான முறையில் மாகாணங்களிடையே நிதியைப் பகிர்ந்தளித்து மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடைகளின் கீழ் போதுமான நிதி வழங்குவதற்கான பாதீட்டுப் பரிந்துரை மற்றும் நாட்டின் உயர் சமூக-பொருளாதார தரங்களுடனான சமச்சீரான பிராந்திய அபிவிருத்ததியை அடைவதற்கான கொள்கைப் பரிந்துரைகள்.

அரசியலமைப்பின் 41 B (6) வது பிரிவின்படி, ஆணைக்குழுவானது பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறவும் பதிலளிக்க வேண்டியதாகவும் இருக்கும்.

1.3 உலகளாவிய தோற்றப்பாடும் இலங்கையின் நிலைமையும்

உலகளாவிய நிலைமைகள் எதிர்வு கூறமுடியாததும் மற்றும் ஒத்திசைந்ததுமான மந்தநிலையை அனுபவிக்கிறது. 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய வளர்ச்சி 4.9% என சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது. 2020 முன் அரை ஆண்டின் செயல்திறனில் COVID-19 தொற்றுநோய் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிர்வு கூறப்பட்ட மீட்சி முன்பு கணித்ததை விட மெதுவானதாக உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கூற்றுப்படி, COVID-19 தொற்றுநோய் பரவலால் ஏற்பட்ட பொருளாதார நிச்சயமற்ற தன்மை, 2020 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்திற்கு 2 - 4.1 டிரில்லியன் அமெரிக்க டாலர் செலவாக அமையும். மக்களைப் பாதுகாப்பதற்கும் தொழில்களை பாதுகாப்பதற்கும் கையறு நிலைகளைத் தடுப்பதற்கும் பல அரசாங்கங்கள் தங்களது அவசரகால வாழ்க்கை வழிகளை முன்னெடுத்துள்ளன .

இலங்கையில், அண்மைக் கால பொருளாதார மற்றும் அபிவிருத்தி என்பவற்றிலான மந்தநிலை பல துறைகளில் பின்னடைவுக்கு வழிவகுத்ததுள்ளது. இது கட்டமைப்பு மற்றும் துறை / நிறுவன மீளுருவாக்க தேவைகளை கொண்டுள்ளது. இத்தகைய தடைகளை தகர்த்து நம்பகமான இலக்குகளுடன் முன்னோக்கி செல்லும் தொலைநோக்கு மற்றும் அர்ப்பணிப்பு புதிய அரசாங்கத்துக்கு உள்ளது .

இலங்கை மத்திய வங்கி 2020 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரம் ஆண்டுக்கு 4.5 - 5% ஆக வளர்ச்சியடையும் என எதிர்பார்திருந்தது. இருப்பினும், கோவிட் 19 தொற்றுநோய்களின் பொருளாதார தாக்கத்துடன், இந்த வளர்ச்சி இலக்குகளை அடைதல் மிகவும் சாத்தியமற்றதாகிறது. எதிர்பார்க்கப்படும் அரசாங்க செலவினங்கலிலும் நிச்சயமற்றதன்மை காணப்படுகிறது. தொற்றுநோய்களின் விளைவுகளை எதிர்த்துப் போராடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட சுகாதார பராமரிப்பு செலவினங்கள் மற்றும் சர்வதேச பயண வருமான ஆதார நடவடிக்கைகள், பயணிகள் மற்றும் பொருட்களின் போக்குவரத்திற்காக

விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் மூடப்படுதல் ஆகியவை முக்கிய பொருளாதாரத் துறைகளை பாதித்துள்ளன. வருமானம் மற்றும் வாழ்வாதாரங்களை இழப்பதன் மூலம் சமூகத்தின் ஒரு பெரும் பகுதியினருக்கு சமூக -பொருளாதார தாக்கம் கடுமையானதாக இருந்திருக்கிறது.

2019 ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்பு இலங்கை நிதி அமைச்சானது நாட்டில் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த வரிச் சலுகைகள் குறித்த உத்தரவுகளை விடுத்திருந்தது. பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த நாணயக்கொள்கை மூலம் மத்திய வங்கி மேலும் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கையின் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். இருப்பினும் கோவிட் 19 தாக்கத்தால் பொருளாதாரம் 2020 ஏப்ரல் முதல் வழுக்கிச் சென்றுள்ளது. இரண்டு பெரிய ஏற்றுமதி வகைகளான சுற்றுலா மற்றும் தைத்த ஆடைகளின் கேள்விக்கான வீழ்ச்சி பரந்த பொருளாதாரத்தை பாதிக்கும். வருவாய் வீழ்ச்சியின் விளைவாக கடன்களை திருப்பிச் செலுத்துவதில் ஆபத்தும் அதிகமாக உள்ளது.

ஏற்றுக்கொள்ள கூடிய முறையில் சேவை வழங்குவதை உறுதி செய்வதற்கு அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றின் படி பொது முதலீட்டின் ஆதரவு பொருளாதாரத்திற்கு தேவையாகிறது. இவ் விடயமாக ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் உள்ள பங்குதாரர்களுடனும், சில நிபுணர்களுடனும் அவர்களின் கருத்துகளையும் எண்ணங்களையும் பெற்றுக்கொள்ள ஆலோசனை விவாதங்களை நடாத்தியது. மேலதிகமாக, மாகாணங்களின் தேவைகளை மதிப்பிடுவதில் மாகாண சபைகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

மேற்கண்ட சூழ்நிலையின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான இந்த அறிக்கையை ஆணைக்குழு சமர்ப்பிக்கிறது.

1.4. சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி

ஒரு நாட்டின் பிராந்திய அபிவிருத்தி என்ற வரையறையில் i) அபிவிருத்தி செயல்முறையின் நன்மைகளை பகிர்ந்து கொள்ளும் இடபரம்பல் பகிர்வு மற்றும் ii) சிறப்பான மற்றும் நிலைபேறான பெறுபேறுகளை கொண்டுவரக்கூடிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்களைக் கருத்தில் கொள்ளும் அபிவிருத்தி திட்டங்களில் உள்ளார்ந்த தன்மை ஆகிய இரண்டும் முக்கியமான காரணிகளாகும். சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியானது நாட்டின் பல பகுதிகளிற்கும் கைத்தொழில் உருவாக்கங்களின் பரவலாக்கல் என்பதை உள்ளடக்கிய பொருளாதார முன்னேற்ற நன்மைகளின் விரிவாக்கம் என்பதில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக குறைந்த அபிவிருத்திப் பிராந்தியங்களில் பொருளாதாரத்தின் விரிவாக்கம் மற்றும் துரித வளர்ச்சி என்பன தேசிய மற்றும் பிராந்தியங்களுக்கிடையில் ஒரு சிறந்த சமநிலையை அடைவதாக அமையும். வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருப்பதால், குறித்த இடங்களில் வளங்கள் அதிகமாக பயன்படுத்தப்பட்டு சுங்க பொருளாதார நன்மைகள் உள்ளன. அதாவது ஒப்பீட்டு நன்மைகள் காணப்படுகின்றன. அபிவிருத்தி முன்னெடுப்புக்களும் வளங்களும் பரந்த அளவில் அதிக எண்ணிக்கையான இடவமைவில் பிரயோகிக்கப்படுகின்ற போது நன்மைகள் மிகவும் பரந்துபடுவதற்கு குறைந்த அபிவிருத்தி பிராந்தியங்களில் ஒரு நீண்ட கால திட்டத்தின் மூலம் பாரிய அளவிலான வளர்ச்சிக்கான வழிகாட்டல்களை வழங்க முடியும். தேசிய வருமான அதிகரிப்பு மற்றும் சீரான பிராந்திய அபிவிருத்தி ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாக அமைவதுடன் செயல்திறனுடைய ஒட்டுமொத்தமானதும் மற்றும் ஒவ்வொரு கட்ட சமூக-பொருளாதார வளர்ச்சியினது வடிவத்தையும் தீர்மானிக்கிறது.

நடைமுறையில், பிரதேசரீதியாக ஒப்பீட்டு வளநலன்கள் இருக்கின்றபோது அனைத்து பிரதேசங்களிற்கும் சம அளவில் வாய்ப்பளிப்பது என்பது இயலாததொன்றகும் இருப்பினும், ஒவ்வொரு பிராந்தியத்தின் வளச்சாத்தியங்கள் ஒரே மாதிரியாக இல்லை என்பதுடன் இருப்பவை

முழுமையாக நியாயமான முறையில் விருத்திசெய்யப்பட வேண்டும். காரணிகள் மற்றும் அம்சங்கள் எளிதில் மாற்றப்பட முடியாதவை, இருப்பினும் கல்வி மற்றும் செயல்திறன் மட்ட அதிகரிப்பு, வலுவூட்டல், தொழில்நுட்பம் ஆகியவற்றை பாரிய அளவில் உயர்த்துவனூடாக செல்வாக்கு செலுத்தக்கூடியதாக அமையும். திட்டமிடலில் தேசிய மற்றும் உபதேசிய மட்ட ஒருங்கிணைப்பு (மேலிருந்து கீழாக மற்றும் ஒருங்கினைந்த அபிவிருத்தி செயல்பாடுகளில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு (கிடைரீதியாக) என்பன பயனுள்ளதும் பிரதேசமட்ட வெற்றிக்கு முக்கியமானதும் அவசியமானதும் ஆகும். நடைமுறையுடன் கூடிய ஒரு பொதுவான அபிவிருத்தி கட்டமைப்பும் அதன் நடைமுறைகளும் தேவைப்படுகிறது .

பொதுவாக, சமூக பொருளாதார குறிகாட்டிகள் மற்றும் அவற்றின் முனேற்றம் என்பவற்றின் அடிபடையில் இலங்கையில் மாகாணங்களின் தர நிலையை தீர்மானிக்கின்ற போது ஒன்பது மாகாணங்களையும் மூன்று பிரிவுகளாக வேறுபடுத்தப்படலாம். மேல் மாகாணம் எப்போதுமே சற்று ஏனைய அனைத்து மாகாணங்களுடன் ஒப்பிடும்போது ஒரு சிறப்பான நிலையில் அதிக இடைவெளியுடன் வேறுபட்டுகாணப்படுகிறது. மற்ற ஐந்து மாகாணங்களான ஊவா, வடமத்திய, கிழக்கு, வடக்கு மற்றும் சப்ரகமுவ என்பவை மிக கீழ் மட்டத்தில் தேசிய சராசரியை விட மிக குறைந்த நிலைகளில் உள்ளன. ஏனைய மூன்று மாகாணங்களான மத்தி, வட மேற்கு மற்றும் தெற்கு மிதமான மட்டத்தில் உள்ளன, ஆனால் மேற்கு மாகாணத்திற்கு மிகவும் கீழேயே உள்ளன.

1.5 தேசிய கொள்கையும் புதிய அரசாங்கத்தின் செல்நெறியும்

அ) அற்புத சுபீட்சத்துக்கான பார்வை

அரசாங்கத்தின் இத் தேசிய கொள்கை கட்டமைப்பானது " அற்புத சுபீட்சதுக்கான பார்வை நோக்கு " என்பது ஒரு பிரஜையின் , மனநிறைவான குடும்பம், ஒழுக்க நியாயமான சமூகம் மற்றும் சுபீட்சமான தேசம் என்பவற்றின் நான்கு மடங்கு நல் விளைவுகளை அடைவதை நோக்கமாகக் கொண்ட **10** முக்கிய கொள்கைகளை கொண்டமைகிறது. சமூக, பொருளாதார, சூழல் மற்றும் அரசியல் பரிமாணங்களுக்கு உரிய கவனம் செலுத்தி முக்கிய கொள்கை கட்டமைப்பில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன.

- தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை
- நட்புறவுடனான அணிசேரா வெளியுறவுக் கொள்கை
- ஊழல் அற்ற நிர்வாகம்
- மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் புதிய அரசியலமைப்பு
- உற்பத்தி திறனுடைய பிரஜைகளும் சிறந்த மனித வளமும்
- மக்கள் மயப்படுத்தப்பட்ட பொருளாதார மேம்பாடு
- தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகம்
- பௌதீக வள அபிவிருத்தி
- நிலைபேறான சுற்றுச்சூழல் முகாமைத்துவம்
- சட்டம் ஒழுங்கை பின்பற்றுவதும் விழுமிய அடிப்படையிலானதுமான சமூகம்

புதிய அரசாங்கமானது உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கை கொண்டு முழு உரிமையையும் கொண்டுள்ள நாட்டு மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்மொழிந்துள்ளது.

ஆ) புதிய அரசாங்கத்தின் செல்நெறிகள்

புதிய அரசாங்கத்தின் தொலை நோக்கும் அதன் அண்மைய அறிவிப்புகளும் நாட்டில் சிறந்த சமூக - பொருளாதார செயல்திறனை நோக்கமாகக் கொண்டு பல விடயங்களினதும் சீர்திருத்தங்கள் மற்றும் மறுசீரமைப்பைக் சுட்டிக்காட்டுகின்றன.

- *உள்ளூர் விவசாயிகள், உள்ளூர் தொழில்முயற்சியாளர் மற்றும் கைத்தொழிலாளர்களை பாதுகாக்கின்ற உற்பத்தி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல்*
- *நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கு குடிநீர் வழங்கல்.*
- *பாடசாலைகளில் போதுமான வசதிகளைப் பேணுதல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பாடங்களைப் பின்பற்ற மாணவர்களை ஊக்குவித்தல். மேலும், முன்பள்ளி, கல்வி சீர்திருத்தங்கள், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கல்*
- *கிராமப்புற மருத்துவமனைகளில் போதுமான வளங்களையும் வசதிகளையும் பராமரித்தல் மற்றும் இலவச சுகாதார சேவைகளை வழங்குவதில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல். ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய மருத்துவ முறையைப் பாதுகாத்து ஊக்குவித்தல் .*
- *நாடு முழுவதும் குளங்களை புனரமைப்பு செய்து, பயிர்ச் செய்கையின் போது போதுமான நீரையும் வழங்குவதற்கேற்ப அபிவிருத்தி செய்தல் .*
- *ஒவ்வொரு மாகாணத்திற்கும் சமமான பகிர்வினடிப்படையில் நாட்டினது உற்பத்திக்கு பங்களிக்கும் வகையில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குதல். ஒவ்வொரு கைத் தொழிலிலும் சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.*
- *விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நவீன பொருளாதாரம், பெறுமதி சேர்கை மற்றும் ஏற்றுமதியை உருவாக்குத்தல்.*
- *நகர்ப்புற, கிராமப்புற உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வீட்டுவசதியை அபிவிருத்தி செய்தல்*
- *பாரம்பரிய கைத்தொழில்களின் முறையான வளர்ச்சிக்கு உற்பத்தித் துறைகளில் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அணுகுமுறை.*
- *பொதுமக்களுக்கு வினைதிறனுடயதும், விரைவானதும் மற்றும் வசதியானதுமான சேவைகள்*

சமசீரான பிராந்திய அபிவிருத்திக்கும் மற்றும் நாட்டு மக்களின் நல்வாழ்வு என்பவற்றை அடைந்துகொள்வதில் ஆணைக்குழு தனது மதிப்பீட்டாய்வு மற்றும் பரிந்துரைகளில் இந்த செல் நெறிகளையும் உள்வாங்கி கொண்டுள்ளது.

இ) 2020 க்கான பரிந்துரைகளும் அமைச்சரவை அமைச்சரவை அனுமதியும்

புதிய அரசாங்கத்தின் கையேற்பில் நிதி ஆணைக்குழுவினால் ஜனாதிபதிக்கான பரிந்துரைகள் -2020 பின்னராக இணைந்த இரண்டு புதிய பதவிவழி உறுப்பினர்களின் அவதானங்கள் ஒப்புதலுடன் ஜனாதிபதிச் செயலகத்திற்கு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் 18.02.2020 அன்று அமைச்சரவை பத்திரமொன்றை அமைச்சரவைக்கு சமர்பித்திருந்தார்.

குறிப்பிட்ட அமைச்சரவை பத்திரத்தில்; மாகாண சபைகளிற்கான நிதி தேவை என்பது அபிவிருத்தி கொள்கை கட்டமைப்பு, பொதுச் செலவு முகாமைத்துவம், மாகாண நடுத்தர கால அபிவிருத்தி திட்டம் மற்றும் மாகாண சபைகளின் முன்னேற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இந்த பரிந்துரைகள் மாகாணங்களிடையே மூலதன நிதியை பகிரந்தளிப்பதற்கு ஒரு புள்ளிவிவர முறையை அறிமுகப்படுத்தியிருப்பதனையும் குறிப்பிடுகிறது.

நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் கூடிய அமைச்சரவை பத்திரத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பின்வரும் விடயங்களை அமைச்சரவையின் விசேட கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார்.

- மாகாண சபைகளுக்கிடையில் பாரிய ஏற்றத்தாழ்கள் புள்ளிவிவர ரீதியாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லையானாலும் சுபீட்ச குறிகாட்டியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படுக்கின்றன.
- மீண்டெழும் செலவினங்களுடன் ஒப்பிடும்போது வருவாய் உருவாக்கம் மிகவும் குறைவு.
- பொது திறைசேரியினால் மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லை.
- மாகாண சபைகளினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி திட்டங்களுக்காக திறைசேரியினால் மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கப்படுகின்ற நிதியில் இரட்டிப்பு உள்ளது, நிதி ஒதுக்கீடு மத்திய அமைச்சுகள் மூலமாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற இரட்டிப்பு தன்மை காணப்படுகின்றது.
- தனியார்துறை பங்களிப்பு காரணமாக முன்னேற்றம் இருப்பதைக் காட்டும் சுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு மேலும் மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மாகாண கணக்காய்வு அறிக்கைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக கௌரவ ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளது கவனம் தேவை.

மேலும், அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தனது அவதானிப்புகளையும் இதில் சுட்டிக்காட்டியிருந்தார்

- மாகாண சபைகளில் நடைபெற்று வரும் அபிவிருத்தி வேலைகள் தொடர்பான புள்ளிவிவர தரவுகளை விட சேவை வழங்கலின் தரத்தை மேம்படுத்துவதற்கான முன்னுரிமை போதுமான அளவில் வழங்கப்பட வேண்டும்
- நிதி ஒதுக்கீட்டில் இரட்டிப்பு தன்மை ஏற்படுவதைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளின் தொடங்குதல்கள் விரும்பத்தக்கது.
- மாகாணங்களது வருமான உருவாக்கத்தின் அளவை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் வருமான உருவாக்கத்திற்கான புதிய வழியினை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

அதிமேதகு ஜனாதிபதியால் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு;

- நிதி ஆணைக்குழு சமர்ப்பித்த பரிந்துரைகளை செயல்படுத்தவும்
- குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதை தெரிவித்து அரசியலமைப்பின் பிரிவு **154** ஆர் **(7)** இன் பிரகாரம் அந்த பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்பிக்கவும் அமைச்சரவை **19.02.2020** அன்று ஒப்புதல் வழங்குகிறது.

2. தேசிய வரவு செலவு திட்டமும் மாகாண சபைகளிற்கான அரச கொடைகளும்

2.1. நிதி அதிகார பகிர்வு தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள்

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மத்திய அரசு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்ற மூன்று தனித்துவமான படிநிலைகளை உருவாக்கியது. அதன் பிரகாரம், மாகாண சபைகளால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நிதி அதிகாரத்தின் பகுதிகளை வரையறுப்பதன் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகார ஆளுகை நிறுவப்பட்டது. பதின்மூன்றாவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள மூன்று பட்டியல்களான, மாகாண சபைகளின் பட்டியல் (மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள்), ஒதுக்கப்பட்ட பட்டியல் (மத்தியிலுள்ள அதிகாரங்கள்) மற்றும் ஒத்தியங்கும் பட்டியல் (இணைந்து செயலாற்றும் விடயங்கள்) என்பவற்றில் அதிகார விடயப்பரப்புக்கள் குறிப்பிடப்பட்டிருகின்றன.

*உப தேசிய மட்டங்களில் பொது முதலீடும் மற்றும் சேவை வழங்கல்களும் **i)** மத்திய அரச செலவு நிறுவனங்கள் **ii)** உள்ளூராட்சி அதிகாரசபைகள் உள்ளிட்ட மாகாண சபை செலவு நிறுவனங்கள் என்பவற்றால் மேற்கொள்ளப்படுகிறது.*

மாகாணத்துக்குரிய விடயங்கள் மிகப்பரந்ததொன்றாக கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, வீதிகள், விவசாயம், நீர்ப்பாசனம், சமூக சேவைகள், புனர்வாழ்வு, கிராம அபிவிருத்தி, விளையாட்டு மற்றும் இது போன்ற விடயங்களையும் உள்ளடக்குகின்றது. மாகாண சபைகளால் சேகரிக்கப்பட வேண்டிய வருமான மூலங்களும் மாகாண பட்டியலில் அடங்குகின்றது. மாகாண சபைகள் அவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பட்டியலில் உள்ள விடயங்களின் கீழ் நடவடிக்கைகளை அமுல்படுத்த பொறுப்புடயனவாக இருப்பதுடன் மேலும் ஒத்தியங்கும் பட்டியலின் கீழ் உள்ள நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் பொறுப்புடையவையகவும் இருக்கின்றன. எவ்வாறாயயினும் பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிவர்த்தி செய்வதற்கு மாகாணசபைகளிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் மூலங்கள் போதியளவில் இருக்கவில்லை என்பது கண்கூடு. எனவே இந்த இடைவெளிகளை நிரப்புவதற்கு தேவையான போதியளவு நிதியை வழங்க வேண்டியது கட்டாய பொறுப்பாகிறது.

2.2 மேலிருந்து கீழான அதிகார பகிர்வும் கிடைமட்ட சமநிலையும்

*அரசியலமைப்பின் உறுப்புரை 154 **R** என்பது நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் நோக்குடன் வருடாந்த தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதியளவு நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்வதற்கு நிதி ஆணைக்குழு பரிந்துரைகளை செய்வது கட்டாய பொறுப்பாகிறது.*

பகிர்வு மேலிருந்து கீழான அதிகாரப் மற்றும் கிடைமட்ட சமநிலை என்பன ஜனநாயக நீதியிலமைந்த பரவலாக்கம் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி கொள்கை மட்டத்தில் சிறந்த அர்பணிப்பு மற்றும் செயல்படுத்துவதற்கு பொருத்தமான வடிவமைப்பு ஆகியவற்றின் ஊடக திறம்பட அடைந்துகொள்ள முடியும்.



வளங்கள் குறைவாக இருப்பதால், தற்போதைய பாதீட்டு மட்டுப்படுத்தல் நிலையில் தேவைகளைப் பூர்த்தி செய்ய 'போதுமான நிதி' வழங்குவது என்பது கடினமானதாகும். தேசிய பாதீட்டிளலிருந்து மேலிருந்து கீழாக பொருத்தமான அளவுகோளினடிப்படையில் ஒரு மாகாணங்களுக்கு ஒரு நியாயமான பங்கினை வழங்கி கிடை ரீதியான சமநிலையை பேணுவதே இயலுமானதாக அமையும் .

2.3. மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதி ஒதுக்கீடு

மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான நிதி ஒதுக்க வேண்டும் என்று அரசியலமைப்பு கூறுகிறது. இந்த சூழலில், நிதி ஆணைக்குழு

- நாட்டில் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கத்துடன் அரசாங்க வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒன்பது மாகாணங்களுக்கும் வள ஒதுக்கீட்டிற்கான நியமங்களை அறிவு சார் முறையில் வகுக்கிறது.
- ஒவ்வொரு மாகாணசபையும் சமர்ப்பித்த தேவைப்பாடுகளினது அடிப்படையில் மாகாணங்களின் தேவைகளை மதிப்பீட்டாய்வு செய்து அவற்றை நிர்ணயம் செய்வதுடன் பரிந்துரை செய்யப்படுகிறது..
- மாகாணங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் மாகாண சபைகளிற்கு அந்த நிதியை பகிர்ந்தளிக்கிறது.

2.4. சமசீரான அபிவிருத்திக்காக மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான நிதியை ஒதுக்குதல்.

பொதுவாக, மாகாணங்களின் தேவைகளுக்கு போதுமான நிதி என்பது 'மாகாணங்களின் தேவைகளுக்கு போதுமான அளவு வள ஒதுக்கீடு செய்தல் அல்லது தேவைப்பாடுகளின் பண வடிவம்' என்பதாகும். இருப்பினும், தேவைகள் கிடைக்கக்கூடிய வளங்களை விட அதிகமாகவே உள்ளன. அரசாங்கம் பாதீட்டு மட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்ற நிலையில் நிதி வளங்கள் குறைவாக இருப்பதனால், நிதியினை முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்குகிறது. இந்த சூழ்நிலையில், அபிவிருத்தி மற்றும் வள ஒதுக்கீட்டை சமநிலைப்படுத்துவது என்பது சிக்கலான விடயமாக அமைகிறது.

மாகாணங்களின் தேவைகள் பற்றி உரையாடும் போது, மாகாண சபைகளின் வகிபாகம் அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய பாதீட்டில் இருந்து நிதியைப் பயன்படுத்தி மத்திய அரசாங்க மற்றும் மாகாண சபை நிறுவனங்களினால் மாகாணங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதால் ஒதுக்கப்பட்ட, பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒத்தியங்கும் விடயங்களின் கீழ் வழங்கப்படும் சேவைகளை கவனமாக கருத்தில்கொள்ள வேண்டும்.

மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் அவற்றினது நிதி தேவைகள் அவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட செயல்பாடுகளை மட்டும் கொண்டுள்ளன. அவை சமர்ப்பிக்கும் மூலதன பாதீட்டு தேவைகள் என்பது தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அரசாங்க கொடைகளை மட்டுமே உள்ளடக்கியிருக்கிறது. மாகாண சபைகள் தமது மூலதன தேவைகளை பெற்றுக்கொள்ள நாடாளாவிய நிகழ்ச்சிதிட்டங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்கள் மூலமும் ஏனைய நிதி நிதி மூலங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

இணைப்பு- 07 என்பது உப தேசிய மட்டத்தில் நிறுவனங்களுகிடையேயான நிதி பாய்ச்சல் தொடர்புகளை விவரிக்கின்றது.

தேசிய வரவு செலவு திட்டதிலிருந்து மாகாண சபைகளுக்கு அவற்றின் சேவைகளை நிறைவு செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதில் நிதி ஆணைக்குழு பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்கிறது

1. *கிடைக்கக்கூடிய மொத்த மூலதன செலவு பாதீட்டினை மாகாணங்களிடையே கூட்டுச் சுட்டெண் மற்றும் நியமங்களின் அடிப்படையில் சமத்துவமாக பகிர்தல். கூட்டுச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த நிதிப் பெறுமதிகள் மாகாணங்களுக்கிடையே சமத்துவ ரீதியாக பகிரப்படுகின்றது.*

2. *மாகாண சபைகளுக்கு அரசாங்க நிதி கொடைகளை ஒதுக்குவது என்பது அரசியலமைப்பின் கீழான அதிகாரப் பகிர்வு என்பதற்கமைவாக சேவை வழங்கல்களின் அளவினை அடிப்படையாகக் கொண்டமையும். இதில், தேசிய வரவுசெலவுத் திட்டதின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் தொகையானது மாகாணசபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் கூட்டுப்பொறுப்பான ஒத்தியங்கும் விடயங்கள் என்பவற்றின் கீழ் சேவை வழங்கல்களின் மொத்த அளவையும் கருத்தில் கொள்ளப்படலாம் .*

3. *மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களுக்கானஒரு நடுத்தர கால ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டத்தை மிக விரிவான முறையில் தயாரித்து வைத்திருக்கின்றன. அவர்கள் தங்கள் நடுத்தர கால திட்டத்திற்கு அமைவாக மொத்த வருடாந்த நிதி தேவைகள் என்பதில் பிற நிதி மூலங்களையும் கருத்தில் கொண்டு தமது வருடாந்த நிதி தேவைகளை எமக்கு சமர்பிக்கின்றன. மாகாண சபைகளுக்கு அரசு வழங்கும் கொடைகளின் அளவானது பாதீட்டு மட்டுப்படுத்தல்கள் காரணமாக ஒவ்வொரு மாகாணசபையினாலும் கோரப்படும் நிதித் தேவைகளுக்கு சமமானதாக அமையவியலாது.*

4. *ஒவ்வொரு மாகாண சபைக்கும் கிடைக்கக்கூடிய மூலதன கொடையினை துறைகள் மற்றும் உப துறைகளுக்கிடையே ஒதுக்கீட்டை மேற்கொள்வதானது, தேசிய வரவு செலவு திட்ட*

அனுமதியின் பின்னர் நிதி ஆணைக்குழு மற்றும் மாகாணசபைகளின் இணக்க உரையாடலுடன் முன்னுரிமை அடிப்படையில் அறிவுபூர்வமாக இடம்பெறும்.

2.5 தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்கான அரச கொடைகள்

அரசாங்கம் மாகாண சபைகளிற்கான நிதி கொடைகளை பின்வரும் வடிவில் ஒதுக்கீடு செய்து வழங்குகிறது

அ) தொகுதிக்கொடை என்பது பொது சேவை வழங்கல்களை தொடர்ந்து வழங்குவதற்கும் மேம்படுத்துவதற்குமான நோக்கதில் மாகாணங்களின் மீண்டெழும் செலவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்படுகிறது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி தனியாள் வேதனங்கள் என்பதே மாகாண சபையினது மீண்டெழும் செலவினங்களின் முக்கிய பகுதியாகும். இந்த கொடையில் ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை உள்ளடக்கிய உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கான மாற்றல்கள் மற்றும் மூலதன சொத்துக்களை பராமரிப்பதற்கான செலவினங்கள் என்பன உள்ளடங்குகின்றன. தொகுதிக் கொடை என்பது மாகாணங்களின் மீண்டெழும் செலவு செலவினங்களுக்கும் அந்த மாகாணத்தால் சேகரிக்கப்பட்ட வருமானம் என்பவற்றின் இடைவெளியை நிரப்ப தேவையான அளவாக கணக்கிடப்படுகிறது.

ஆ) மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை (PSDG) என்பது பகிர்ந்தளிக்கப்பட்ட பல்வேறு துறைகளில் உள்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திகளில் கவனம் செலுத்தி மூலதனம் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்வதாகும். மாகாணங்களுக்கான நடுத்தர கால அபிவிருத்தித் திட்டம் மற்றும் மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டம் ஆகியவை நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களுடன் மாகாண சபைகளினால் ஒரு பொதுவான ஒருங்கிணைந்த திட்டமிடல் கட்டமைப்பில் தயாரிக்கப்படுகிறது.

இந்த வருடாந்த மாகாண அபிவிருத்தி திட்டத்திற்கான நிதி ஏற்பாடுகளது பல்வேறு துறைகளின் கீழ் வழங்கப்படுகிறது. மாகாணங்களின் குறிப்பிட்ட தேவைகளை கருத்தில் கொண்ட மாகாண அபிவிருத்தி திட்டத்தில் பின்வரும் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மாகாண குறிதொதுக்கிய அபிவிருத்தி கொடையின் (PSDG) பெரும் பகுதி இத் துறைகளிற்கு ஒதுக்கப்படுகிறது.

* கல்வி.
* மேலைத்தேச மருத்துவம்
* சுதேச மருத்துவம்
* விளையாட்டு
* சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு
* சமூக சேவைகள்
* கலாசார மற்றும் சமய அலுவல்கள்
* கூட்டுறவு அபிவிருத்தி
* சிறுவர் பராயகால அபிவிருத்தி

* மாகாண வீதிகள்
* தோட்ட உட்கட்மைப்பு
* போக்குவரத்து
* வீடமைப்பு
* கிராமியமின்னினப்பு
* உள்ளூராட்சி
  - உள் ளூராட்சி வீதிகள்
  - சமூக நீர் விநியோகம்
  - கழிவு முகாமைத்துவம்
  - ஏனைய சேவைகள்

* காணி அபிவிருத்தி
* நீர்ப்பாசனம்
* விவசாயம்
* கால்நடை வளர்ப்பு
* நன்னீர் மீன் வளர்ப்பு
* சிறு கைத்தொழில்
* உல்லாசத்துறை
* கிராமிய அபிவிருத்தி

மாகாண முதலீட்டு திட்டத்தில் இனங் காணப்பட்ட இடைவெளிகளை ஈடு செய்வதற்கென ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு நெகிழ்வான தொகை ஒதுக்கப்படுவதுடன் விசேட தேவையுடைய கிராமங்களுக்கெனவும் ஒருதொகை ஒதுக்கப்படுகிறது. நிதி ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யபடும் PSDG கொடைக்கு மேலதிகமாக தேசிய மட்டத்தில் மாகாணங்களில் இனங்காணப்பட்ட விசேட கருதிட்டங்களுக்கான ஒதுக்கீடுகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றன .

(PSDG) இன் கீழான நிதி ஒதுக்கீட்டை கொண்டு தயாரிக்கப்படுகின்ற ஒவ்வொரு மாகாண சபையினதும் வருடாந்த அபிவிருத்தித் திட்டம், நிதி ஆணைக்குழுவினால் குறித்த மாகாண சபையுடன் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டு அந்த ஆண்டில் அமுலாக்க உடன்பாடு காணப்படுகிறது.

இ) பிரமாண அடிப்படையிலானகொடை (CBG) என்பது மக்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை உயர்த்துவதுடன் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களிப்பு செய்கின்ற மூலதன செலவினங்களுக்கு நிதி வழங்குவதாகும். நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி திட்டமிடப்பட்ட வரையறைக்குள் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளுக்காக இணக்கம் காணப்பட்ட நிதியை மாகாணசபைகள் தேவைக்கேற்றவாறு செலவழிக்கத் தக்கதாக கிடைக்கிறது.

ஈ) வருவாய் செயல்திறன் கொடை என்பது மாகாண வருவாயை ஊக்குவிப்பதற்காக மாகாண சபைகளுக்குபரிந்துரை செய்யப்படுகின்றது. இது பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான சேகரிப்பு தொடர்பான ஒரு சிறிய அளவிலான அபிவிருத்தி சார்ந்த கொடையாகும். இந்த கொடையை மாகாண சபைகள் தாம் தேவைக்கேற்றவாறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

03. மாகாணங்களது சமூக பொருளாதார நிலைமையும் சேவை வழங்கல்களும்

சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட பல்வேறு உபாயங்கள் மற்றும் நிகழ்ச்சி திட்டங்களை செயல்படுத்தியிருந்த போதிலும் நாடு இன்னும் மாகாணங்களிடையே குறிப்பிடத்தக்க மட்டங்களில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வருமான சமமின்மையும் அனுபவிக்கிறது. அவ்வாறே மாகாணனங்களுக்குள்ளேயும் பின்தங்கிய பிரதேசங்கள் காணப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தி, பௌதீக மற்றும் சமூக உள்கட்டமைப்புக்கள் பிரதேச இடவமைவுகளில் சமமாக பரவியிருக்கவில்லை என்பதுடன், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம் மற்றும் சேவைகள் போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் பெரும்பாலானவை மேல் மாகாணத்திற்குள்ளேயே அமைந்து நாட்டின் முக்கிய பிராந்தியமாக அமைகிறது.

3.1. மாகாணங்களது சமூக பொருளாதார நிலைமைகள்

*இலங்கையில் உள்ள குடித்தொகை, பொருளாதார நிலைமை மற்றும் வளங்கள் என்பவை ஒன்பது மாகாணங்களிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காட்டிநிற்கின்றன. இந்த ஒன்பது மாகாணங்களின் நிலப்பரப்புக்கள் இலங்கையின் மொத்த பரப்பளவில் **5.73%** இலிருந்து **15.5%** வரையிலும் மக்கள் தொகை **1.1** மில்லியனிலிருந்து **6.1** மில்லின் வரையிலும் வேறுபடுகின்றன. மேல் மாகாணம் மிகச்சிறிய மாகாணமாககாணப்பட்டாலும், அது நாட்டின் மொத்த சன தொகையில் **28.28%** என்ற பெரிய பகுதியை கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகவும் கூடுதலான பங்கை மேல் மாகாணம் பதிவு செய்துள்ளது. வட மாகாணம் மிகக் குறைவான பங்கினை கொண்டுள்ளது. மாகாணங்களுக்கிடையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இடைவெளி **2018** இல் **4.1% - 38.5%** ஆக உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வடக்கு, வடமத்தி, ஊவா மற்றும் கிழக்கு ஆகிய நான்கு மாகாணங்களும் தேசிய பொருளாதாரத்தில் ஒவ்வொன்றும் **06%** க்கும் குறைவாகவே பங்களிப்பு செய்கின்றன.*

அட்டவணை - *01:* **மாகாணங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக-பொருளாதார குறிகாட்டிகள்**

மாகாணங்கள்	நிலப்பரப்பு 2018 (ச.கி.மீ)	நடு ஆண்டு சனத்தொகை 2018 (000)	மாகாண மொ. உ. உற்பத்தி 2018 (ரூபா.பில்.) of GDP 2018 (%)	சராசரி மாத தலா வருமானம் 2016 (ரூ.) (ஒரு வீட்டிற்கு ஒரு நபருக்கு)	நிலப்பரப்பு 2018 (ச.கி.மீ)	வேலையின்மை விகிதம் 2019 (%)	வறுமை தலைச் சுட்டெண் 2016
மேற்கு	3,593	6,129	5,526	38.5	14,400	4.0	1.7
மத்திய	5,575	2,750	1,700	11.8	9,890	6.0	5.4
தெற்கு	5,383	2,637	1,432	10.0	11,253	6.7	3.0
வடக்கு	8,290	1,131	584	4.1	8,434	5.0	7.7
வட மேற்கு	7,506	2,536	1,584	11.0	11,420	4.1	2.7
வட மத்தி	9,741	1,366	816	5.7	11,248	3.3	3.3
ஊவா	8,335	1,364	824	5.7	10,139	4.0	6.5
சப்ரகமுவ	4,921	2,047	1,090	7.6	9,711	4.4	6.7
கிழக்கு	9,361	1,710	810	5.6	8,261	6.4	7.3
மொத்தம்	**62,705**	**21,670**	**14,366**	**100**	**11,307**	**4.8**	**4.1**

மூலம்: இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மொத்த உள்நாட்டு உற்பத்தி மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பன ஏனைய பல பொருளாதார குறிகாட்டிகளிற்கு அடிப்படையாக அமைவதுடன் ஒப்பீட்டளவிலான அபிவிருத்தியை அளவீடு செய்யவும் அடிப்படையாக அமைகின்றன. *2012 - 2018* காலத்தில் பெயரளவிலான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியை இணைப்பு - *8* காட்டுகிறது. மாகாணங்களின் தலா வருமானத்தில் காணப்படும் இடைவெளியானது சமநிலைபடுத்தலுக்கான ஒரு முக்கியமான குறிகாட்டியாகவும் முன்னேற்றத்திற்கான அளவுகோலாகவும் உள்ளது. வரைபடம்-*1* இல் மாகாணங்களிடையே பொருளாதார நிலையில் உள்ள பிராந்திய வேறுபாடுகளை வருமான இடைவெளி குறிகாட்டி தெளிவாகக் காட்டுகிறது.

படம *1:* **வருமான இடைவெளி - மாகாணங்களின் சராசரி மாத தனிநபர் வருமானம்**

மூலம்: இலங்கை மத்திய வங்கி

3.1.1. **மாகாண சுபீட்ச குறிகாட்டியும் மனித மூலதன சுட்டெண்ணும்**

இலங்கை மத்திய வங்கியால் *43* தரவு குறிகாட்டிகளை உள்ளடக்கி கணக்கிடப்பட்ட ஒரு கூட்டுச் சுட்டெண் ணாக மாகாண சுபீட்ச சுட்டெண்கள் மாகாணங்களின் பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வு என்பவற்றை பிரதிபலித்து மாகாணங்களின் முழுமையான சுபீட்ச அளவை பிதிபலிக்கும் ஒரு அர்த்தமுள்ள அளவீடாக அமைகிறது. பொருளாதார உட்கட்டமைப்பு, பொருளாதார வர்த்தக சூழ்நிலை மக்களின் நல்வாழ்வு ஆகிய மூன்று உப குறிகாட்டிகளும் குறிப்பிட்ட துறைகளில் மாகாணங்களின் நிலைமையை காட்டுகின்றன. மாகாண சுபீட்ச சுட்டெண்னிலும் மேல் மாகாணத்திற்கும் பிற மாகாணங்களுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க இடைவெளிகாணப்படுகிறது. மனித மூலதனக் குறியீடு மாகாணங்களின் கல்வி மட்ட அடைதலையும் மற்றும் சுகாதார விளைவுகளையும் காண்பிக்கிறது அத்துடன் மாகாணங்களுக்கிடையேயான வேறுபாடுகளாக கிழக்கு மாகாணத்தில் மிகக் குறைந்ததாக ***51*** இலிருந்து தென் மாகாணத்தில் அதி கூடியதாக ***63*** ஆகவும் காணப்படுகிறது.

அட்டவணை - 02: மாகாண சுபீட்ச சுட்டெண் மற்றும் மனித மூலதன சுட்டெண் - 2018

மாகாணங்கள்	சுபீட்ச சுட்டெண்ணி உப குறிகாட்டிகள்			சுபீட்ச சுட்டெண்	மனித மூலதன சுட்டெண் (%)
	பொருளாதார வர்த்தக சூழ்நிலை	மக்களின் நல்வாழ்வு	சமூக பொருளாதார உட்கட்டமைப்பு		
மேற்கு	1.734	1.125	1.043	1.301	62
மத்திய	0.586	0.274	0.61	0.49	54
தெற்கு	0.680	0.552	0.179	0.47	63
வடக்கு	0.473	0.397	0.328	0.399	52
வட மேற்கு	0.672	0.39	0.305	0.456	59
வட மத்தி	0.495	0.318	-0.044	0.256	57
ஊவா	0.345	0.078	0.179	0.201	55
சப்ரகமுவ	0.568	0.406	0.05	0.341	59
கிழக்கு	0.302	0.075	0.127	0.168	51
இலங்கை	**1.034**	**0.764**	**0.55**	**0.783**	**58**

மூலம்: இலங்கை மத்திய வங்கி, உலக வங்கி

மாகாணங்களின் மதிப்பிடப்பட்ட தேவைகள் என்பது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு ஒப்பிடத்தக்க சேவை வழங்கல்களை மேற்கொள்ள மாகாண பொது முதலீட்டிற்கு ஒரு முக்கிய பிரமாணமாக அமைகிறது. கிடைக்கத்தக்க உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மேலும் முன்னேற்ற விரிவாக்கத்திற்கான தேவைப்பாடுகள் நடைமுறைச் செயல்பாடுகளில் கவனதிற் கொள்ளப்படவேண்டியவையாகும்.

அட்டவணை - *03:* மாகாணங்களின் அடிப்படை தேவைகளும் உட்கட்டமைப்பு வசதிகளும்

மாகாணங்கள்	வீதி அடர்த்தி *2018 (கி.மீ)*	சுத்தமான குடிநீர் *2016 (%)*	விளக்குக்கான மின்சாரம் *2016 (%)*	கழிப்பறை வசதிகள் *2016 (%)*	மருத்துவ மனைகள் *2018*	பாடசாலைகள் *2018*	பல்கலைக்கழக எண்ணிக்கை அனுமதி *2017/2018***
மேற்கு	*1.02*	*98.2*	*98.7*	*93.0*	*158*	*1,356*	*8,432*
மத்திய	*0.72*	*77.7*	*96.8*	*91.5*	*169*	*1,517*	*3,232*
தெற்கு	*0.60*	*92.7*	*98.6*	*92.8*	*125*	*1,110*	*4,346*
வடக்கு	*0.41*	*92.3*	*92.4*	*89.1*	*116*	*987*	*2,105*
வட மேற்கு	*0.55*	*92.7*	*95.9*	*90.3*	*153*	*1,250*	*3,308*
வட மத்தி	*0.32*	*71.2*	*97.3*	*88.7*	*90*	*815*	*1,699*
ஊவா	*0.42*	*79.4*	*96.0*	*92.4*	*95*	*898*	*1,813*
சப்ரகமுவ	*0.78*	*76.0*	*96.4*	*91.8*	*112*	*1,128*	*2,866*
கிழக்கு	*0.24*	*97.7*	*93.2*	*90.6*	*130*	*1,114*	*2,340*
இலங்கை	***0.50***	***88.80***	***96.90***	***91.70***	***1,148***	***10,175***	***30,141***

மூலம்: இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பீடு புள்ளிவிபரத் திணைக்களம், , கல்வி அமைச்சு ,சுகாதார அமைச்சு

குறிப்பு:வீதி அடர்த்தியானது ஒரு சதுர கிலோமீட்ருக்கான வீதியின் நீளமாகும்

***மருத்துவமனை எண்ணிக்கையில் சிறைச்சாலை மருத்துவமனையும் அடங்கும். * * விசேட மேலதிக உள்ளீர்ப்பு நீங்களாக**

3.2. மாகாண சபைகளின் சேவை வழங்கல்கள்

மாகாண விடயங்கள் மிகவும் பரந்துபட்டவை, மேலும் கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, வீதிகள், விவசாயம், நீர்ப்பாசனம் போன்ற முக்கியமான துறைகளையும் உள்ளடக்கியுள்ளது . அரசியலமைப்பு ஏற்பாடுகளின்படி, மாகாண சபைகள் உபதேசிய மட்டங்களில் பொது முதலீடுகளுடன் சேவை வழங்கல் செயல்பாடுகளைச் செய்வதுடன், மேலும் மாகாண நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கு அவசியமான ஆளணிகள் சேவைகளைச் செய்வதற்கேற்ப நிறுவன ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன

அட்டவணை- 04:மாகாண சபைகளது சேவை வழங்கல்கள் - சொத்துக்கள், நிறுவனங்கள் மற்றும் பணியாளர்கள்

மாகாணங்கள்	வீதிகள் கி.மீ 2018		விவசாய நிலம் (ஏக்கர்)2014	பாடசாலைகளின் எணிக்கை 2018	மருத்துவமனைகளின் எணிக்கை 2018	உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எண்ணிக்கை -2019	2020.03.31 இல் உள்ளவாறான மாகாண சபைகளின் அனுமதியளிக்கப்பட்ட ஆளணி
	மாகாண	கிராமிய					
மேற்கு	1,952	11,180	458,360	1,284	130	49	63,874
மத்திய	2,244	13,216	665,949	1,463	163	47	50,128
தெற்கு	1,630	10,491	653,428	1,044	119	49	46,433
வடக்கு	2,120	11,668	298,847	965	113	34	35,999
வட மேற்கு	2,745	20,571	928,422	1,215	150	33	47,973
வட மத்தி	1,948	12,709	745,671	805	88	27	29,992
ஊவா	2,371	10,923	615,669	862	93	28	33,181
சப்ரகமுவ	2,623	7,871	625,947	1,100	110	29	37,879
கிழக்கு	1,121	12,171	411,038	1,084	123	45	37,715
இலங்கை	**18,754**	**110,800**	**5,403,331**	**9,822**	**1,089**	**341**	**383,174**

மூலம்: இலங்கை மத்திய வங்கி, தொகை மதிப்பீடு புள்ளிவிபரத் திணைக்களம்,மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு , கல்வி அமைச்சு ,சுகாதார அமைச்சு

இத்தகைய சூழலில், மாகாண நடுத்தர கால மற்றும் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களின் வழியில் அவர்களின் கட்டாய செயல்பாடுகளுக்கு ஏற்ப அந்தந்த மாகாணங்களில் பொதுச் சேவைகளை வழங்க மாகாண சபைகளுக்கு போதுமான அபிவிருத்தி நிதி அவசியமமாகிறது

04. மாகாண நடுத்தர கால அபிவிருத்தி திட்டமும் மாகாண சபைகளின் செலவு தேவைகளும்

மாகாண சபைகளுக்கு மீண்டெழும் மற்றும் மூலதனத் தேவைகளைத் தயாரிப்பதற்காக நிதி ஆணைக்குழு தனித்தனியாக வழிகாட்டுதல்களை வழங்குகிறது. மாகாண சபைகள் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுகளிற்கமைய அவற்றின் வருடாந்த தேவைகளைத் தயாரித்து, வருடாந்த தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து இருந்து மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடையினை கோரி, மாகாண சபைகளின் வருடாந்த மூலதனம் மற்றும் மீண்டெழும் பாதீட்டு தேவைகளை அவை சமர்ப்பிக்கின்றன.

4.1. மாகாண நடுத்தர கால அபிவிருத்தி திட்டமும் மூலதன பாதீடும்

பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், சமமானதும் ஒருங்கிணைந்ததுமான பிராந்திய அபிவிருத்தி, சாத்தியமான வளங்களின் உச்ச பயன் ஆகியவற்றினை நோக்காக கொண்டு மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களுக்கான நடுத்தர கால அபிவிருத்தி திட்டங்களை தயாரித்துள்ளன. இந்த திட்டங்கள் பல துறைகளின் ஒருங்கிணைப்பு, பெறுபேறுகளிலான அணுகுமுறை போன்றவற்றை உள்ளடக்கி துறைகள் மற்றும் உப துறைகள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் நோக்கினை அடைவதற்கான துறைசார் நிகழ்ச்சி திட்டங்கள் நன்கு வரையறுக்கப்பட்டு வருடாந்த நிதித் தேவைகளுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன .

மாகாணங்களின் நடுத்தர கால ஒருங்கிணைந்த திட்டம் மற்றும் எதிர்பார்க்கப்படும் சேவை வழங்கல்களுடன் ஒவ்வொரு மாகாண சபையும் ஒரு நிறுவன பெறுபேற்று கட்டமைப்பை இது ஒவ்வொரு அபிவிருத்தி துறைக்குமான பெறுபேற்று கட்டமைப்பை கொண்டமைந்தது. மாகாணங்களின் நடுத்தர கால அபிவிருத்தித் திட்டம் மற்றும் மாகாண சபைகளின் நிறுவன பெறுபேற்று கட்டமைப்பு என்பவற்றின் அடிப்படையில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடைகளிலிருந்து நிதியளிப்பதற்காக மாகாண சபைகளால் வருடாந்த தேவைகள் தயாரிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாகாண சபைக்கும் அங்கீகரிக்கப்பட்ட மூலதன கொடை பொது திறைசேரியால் அறிவித்த பின்னர், மாகாண சபைகள் வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்கின்றன.

4.2. மாகாண சபைகளின் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுத் தேவைகள்

அனைத்து மாகாண சபைகளும் 2021 ஆம் ஆண்டிற்கான அரசாங்க கொடையின் கீழ் மூலதன மற்றும் மீண்டெழும் பாதீட்டு தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான நிதி கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

மாகாண சபைகளின் மூலதனத் தேவைகள் மாகாண சபைகளின் கீழ் உள்ள அனைத்து துறைகளையும் நடுத்தர கால அபிவிருத்தி திட்டம் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப கட்டமைப்பான வடிவில் விரிவானதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று, மாகாண சபைகளினது மீண்டெழும் தேவைகளை அங்கீகரிக்கப்பட்ட ஆளணி அடிப்படையில் தனி நபருக்கான சம்பளங்கல் (PE) மற்றும் மூலதன சொத்துக்களை பராமரித்தல் உள்ளிட்ட ஏனைய மீண்டெழும் செலவுகள் (ORE) ஆகியவை விரிவாக சமர்ப்பிக்கப்பட்டன.

அட்டவணை - 05: மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் பாதீட்டு தேவைகளின் கோரிக்கைகள் - 2021

ரூ. மில்.

மாகாண சபைகள்	மூலதன தேவைகள்	மீண்டெழும் தேவைகள்			மொத்தம்
	மா.கு.ஒ.அ(PSDG)	தனியாள் வேதனம்(PE)	ஏனைய மீண்டுவரும் தேவைகள்(ORE)	உப - மொத்தம்	
மேற்கு	13,530	49,160	32,018	81,178	94,708
மத்திய	17,894	37,341	12,338	49,679	67,573
தெற்கு	9,564	33,903	11,366	45,269	54,833
வடக்கு	21,422	25,639	8,837	34,476	55,898
வட மேற்கு	12,181	34,371	10,063	44,434	56,615
வட மத்தி	10,255	20,968	6,939	27,907	38,162
ஊவா	11,101	23,638	7,029	30,667	41,768
சப்ரகமுவ	14,287	30,155	7,480	37,635	51,922
கிழக்கு	22,971	29,408	9,183	38,591	61,562
இலங்கை	**133,205**	**284,583**	**105,253**	**389,836**	**523,041**

05. மாகாண சபைகளுக்கான மூலதன, மீண்டெழும் தேவைகளின் மதிப்பீட்டாய்வு

மாகாண சபைகள் அந்தந்த மாகாணங்களில் தங்களது சேவை வழங்கல்களை மேற்கொள்வதற்காக பின்வரும் வடிவங்களில் நிதியைப் பெறுகின்றன.

1. *நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுத் தேவைகளுக்காக தேசிய பாதீடிலிருந்தான கொடைகள்*

2. *தேசிய / சிறப்பு திட்டங்கள் மூலம் மாகாண சபைகளால் அபிவிருத்தி நடவடிக்கைகளை செயல்படுத்த மத்திய அமைச்சுக்களிடமிருந்து பெறுகின்ற ஒதுக்கீடு*

3. *வெளிநாட்டு நிதியளிப்புடானான சிறப்பு திட்டங்களின் மாகாண அங்கங்களை நடைமுறைப் படுத்துவதற்கான ஒதுக்கீடு.*

5.1. கொடை தேவைகளின் மதிப்பீட்டாய்வு - மூலதனம்

ஒவ்வொரு துறைக்குமான மாகாண மூலதனத் தேவைப்பாடானது மாகாணத்தினுடைய துறைசார் நிறுவனங்களால் இனங்காணப்பட்டு, தேசிய கொள்கை கட்டமைப்பு, அபிவிருத்தி சாத்தியங்கள் மற்றும் மாகாண நடுத்தரகால அபிவிருத்தி திட்டத்திற்கு ஏற்ப மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடையின் (PSDG) கீழ் நிதியளிப்பதற்காக அந்தந்த மாகாண சபையின் வருடாந்த மூலதன தேவைகள் நிதி ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப முன்னுரிமைகளின் அடிப்படையில் இணங்கப்பட்டுள்ளது .

ஒவ்வொரு மாகாண சபையினதும் வருடாந்த மூலதனத் தேவைகளை நிதி ஆணைக்குழு செய்ததுடன் ஆணைக்குழுவானது தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் என்பவற்றுடன் கூட்டாக இணைந்து மாகாண அதிகாரிகளின் பங்களிப்புடன் மதிப்பீட்டாய்வு செய்திருந்தது. மதிப்பீட்டாய்வின் போது, தொடர்ச்சியான வேலை திட்டங்களை மேற்கொள்வது, புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதனை தவிர்த்தல் மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன செலவு தேவைபாடுகளில் முன்னுரிமை கவனம் செலுத்துதல் என்பவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. இறுதியில் மொத்த தொகையாக அனைத்து மாகாண சபைகளுக்கும் ரூ. 77,950 மில்லியன்கள் முடிவு செய்யப்பட்டது.

5.2. கொடை தேவைகளின் மதிப்பீட்டாய்வு – மீண்டெழும் செலவு

மாகாண சபைகளுக்கான மீண்டெழும் தேவைகள் வழிகாட்டுதல்கள் மற்றும் பாதீட்டுக்கான கலந்துரையாடல்களுக்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்றன. தேசிய பாதீட்டு திணைக்கள அதிகாரிகள் ஒவ்வொரு மாகாண சபையின் மீண்டெழும் தேவைகள் பற்றிய கலந்துரையாடலில் பங்குபற்றினர் . மீண்டெழும் தேவைகளில் தனிநபர் சம்பளங்களுக்கான செலவு தேவைகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் மாகாண சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணியினரின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடைமுறையில் மாகாணசபையினது வீதி அபிவிருத்தி, மாகாண பயணிகள் போக்குவரத்து மற்றும் சிறு பராய குழந்தைகள் மேம்பாடு ஆகிய அதிகார சபைகளிற்குரிய மற்றல்களும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

*மேலதிகமாக, மாகாண சபைகளின் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்யும் போது பராமரிப்புக்கான செலவுகள், நிலுவைத் தொகை மற்றும் பொது ஊழியர்களது கடன்கள் உள்ளிட்ட ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்கான அத்தியாவசிய தேவைகள் பரிசீலிக்கப்பட்டன. அனைத்து மாகாண சபைகளுக்குமான மொத்த மீண்டெழும் செலவினங்களின் மதிப்பீடு ரூ. **361,692** மில்லியன் ஆகும்.*

மாகாண வருமான மூலங்கள்

மாகாண சபைகளுக்கான வருமானம் முக்கியமாக இரண்டு மூலங்களிலிருந்து உருவாக்கப்படுகிறது:

i) *அரச வருமான மாற்றல்கள்*

ii) *பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்களிலிருந்து வருமான சேகரிப்பு*

*பொது திறைசேரியினால் வெளியிடப்பட்ட நிதிக் கொள்கை சுற்றறிக்கை எண் **01/2010** இன் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமானத்தின் முக்கிய ஆதாரமான வியாபார புரள்வு வரி **(BTT)** ரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலீடாக அரசாங்கத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தை மாகாண சபைகளுக்கு பின்வரும் சதவீதங்களில் மாற்றுவதற்காக சிறப்பு வருவாய் பகிர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.*

*அ. தேசத்தை கட்டியெழுப்பும் வரிகளில் **33 1/3% (NBT)***

*ஆ. முத்திரை வரிகளில் **100%***

*இ. வாகன பதிவு கட்டணத்தில் **70%***

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாவது அட்டவணையில் 36.01 முதல் 36.20 வரையாக வரி மற்றும் வரியல்லாத வருவாய் மூலங்கள் பட்டியலிடப்பட்டிருந்தாலும், மாகாண வருமனத்தின் முக்கிய ஆதாரங்களில் மோட்டார் வாகன உரிம கட்டணம், கலால் வரி, முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதம் என்பவை மட்டுமே உள்ளடக்குகின்றன. மாகாணசபைகளினால் சேகரிக்கப்படும் முத்திரை வரி மற்றும் நீதிமன்ற அபராதம் உள்ளூராட்சி அதிகரசபைகளுக்கு மாற்றப்படுகிறது.

2021 ஆம் ஆண்டிற்கான வருவாய் மதிப்பீடுகள்

*மாகாண சபைகளிற்கான வருவாய் மதிப்பீடுகளானது 1) மாகாண சபைகளின் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இலக்குகள் மற்றும் **ii)**மாகாண சபைகளுக்கு மாற்றல் செய்யவேண்டிய அரசாங்க வருவாய்களின் மதிப்பீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மாகாண சபைகளிற்கான தொகுதி கொடை என்பது மாகாணசபைகளின் மீண்டெழும் செலவீன தேவைகளாக மதிப்பிடப்பட்ட தொகையிலிருந்து மாகாண சபைகளினது பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இலக்குகளை கழிப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.மாகாண சபைகளிற்கான அரசாங்க வருவாய்களின் மாற்றல்கள் என்பது அரசிறை கொள்கைகள் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட வேண்டியதுடன் அந்த தொகைகள் அரசிறை திணைக்களத்தினால் சமர்பிக்கப்படாததால் அத்தொகை இங்கு கழிக்கப்படவில்லை.*

அட்டவணை - 06: 2021 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளுக்குரிய மூலதனம் மற்றும் மீண்டெழும் நிதி கொடைகளுக்கான மதிப்பீடு

ரூ. மில்

மாகாண சபைகள்	மூலதன செலவு தேவை	மீண்டெழும் செலவினம்		
		மதிப்பிடப்பட்ட செலவு	பகிர்ந்தளிக்கப்பட்ட வருமான இலக்கு	தொகுதி கொடை
மேற்கு	*7,900*	*68,531*	*8,050*	*60,481*
மத்திய	*10,153*	*46,793*	*2,275*	*44,518*
தெற்கு	*7,248*	*42,440*	*2,131*	*40,309*
வடக்கு	*11,674*	*32,585*	*1,035*	*31,550*
வட மேற்கு	*6,272*	*41,798*	*2,560*	*39,238*
வட மத்தி	*6,316*	*27,292*	*1,451*	*25,841*
ஊவா	*7,942*	*30,287*	*1,050*	*29,237*
சப்ரகமுவ	*6,894*	*35,775*	*1,480*	*34,294*
கிழக்கு	*13,551*	*36,191*	*1,030*	*35,161*
மொத்தம்	***77,950***	***361,692***	***21,062***	***340,629***

குறிப்பு: மாகாண சபைகளுக்கான அரசினது வருமான மாற்றல்களில் கழிக்கப்பட்ட வருமானம் உள்ளடங்கபபடவில்லை

06. 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து மாகாண சபைகளுக்கான கொடைகளின் பரிந்துரைகளும் பகிர்வுகளும்

6.1 மூலதன கொடைக்கான பரிந்துரைகளும் பகிர்வுகளும் - 2021

மாகாண சபைகளுக்காண மூலதன நிதியினை பரிந்துரைக்கும் போது பிராந்திய ஏற்றத்தாழ்வுகள், மாகாண மற்றும் துறை சார்ந்த விடயங்கள் குறித்து கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆணைக்குழுவானது மாகாணங்களிடேயே வளங்களை ஒதுக்குகின்ற போது தேவைகள், சமத்துவம், செயல் முன்னேற்றம் என்ற தத்துவங்களின் அடிப்படையை கவனத்தில் கொண்டு செயற்படுகிறது.

மாகாணங்களின் தேவைபாடுகளும் நிதி தேவைகளும் வள ஒதுக்கீட்டை பரிந்துரைப்பதற்கான அடிப்படையாகும். ஒவ்வொரு மாகாண சபையும் தமது நடுத்தர கால மூலோபாய திட்டம் மற்றும் துறைகளுக்கான பகுப்பாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் தேவைகளை மதிப்பிட்டு அதற்கான நிதி தேவைகளை பாதீட்டிலிருந்து பெற்றுக்கொள்ள மூலதன செலவினங்களுக்கான நிதியைக் கோருகிறது. தேசிய பாதீடிலிருகின்ற பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான ஒதுக்கீடுகள் முழுவதும் மாகாண சபைகளிடற்கே ஒதுக்கப்பட வேண்டுமென்றே ஆணைக்குழு கருதுகிறது. நிதி ஆணைக்குழு சமூக பொருளாதார வேறுபாடுகளை ஆராய்ந்து ஒரு கூட்டு சுட்டெண் மூலம் சமத்துவ நியமங்களை பயன்படுத்துகிறது.

PSDG இன் கீழான மூலதன பாதீட்டு தேவைகள் ஒவ்வொரு மாகாண சபைகளாலும் அம் மாகாணங் களினது தேவைகள் மற்றும் மாகாணத்துக்கு கிடைக்க கூடிய ஏனைய நிதி மூலங்கள் என்ற அடிப்படையில் தகுந்த சீர் முறையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. மாகாணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாகாண சபைகளுக்கு மூலதன கொடையை வழங்க நிதி ஆணைக்குழு பரிந்துரை செய்ய வேண்டும், அடுத்த வருடத்திற்கான அரசாங்க மூலதன பாதீட்டின் அளவு எவ்வளவு என்பது பற்றி தெரியாத நிலையில் உள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக மாகாண சபைகளுக்கு மூலதன கொடையை வழங்குவதில் அரசாங்கம் தனது மொத்த மூலதன செலவு பாதீட்டில் குறைந்தது 30% இணையாவது கவனத்தில் கொள்ளவேண்டும் என்பது எமது கருத்தாகும்.

மாகாணங்களிடையே மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடை (PSDG) பகிர்வானது மாகாணங்களின் தற்போதைய தேவைகளின் அடிப்படையிலும், கூட்டு சுட்டெண்ணைப் பயன்படுத்திய சமத்துவ பங்கு அடிப்படையிலும் பொருத்தமான உரிய விகிதத்தில் இருத்தல் வேண்டும். மேலதிகமாக பிரமாண அடிப்படையிலான கொடை மற்றும் வருமான அடிப்படையிலான கொடை என்பன தனித்தனியாக மதிப்பிடப்பட்டு மாகாண சபைகளுக்கான மொத்த தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

மாகாண சபைகளால் சமர்பிக்கப்பட்ட தேவைகளை நிதி ஆணைக்குழுவானது பாதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் கூட்டாக இணைந்து மதிப்பிட்டது. 2021 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து அனைத்து மாகாண சபைகளுக்கும் PSDG மொத்தத் தொகை பாதீட்டு மட்டுப்படுத்தல்களை கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட மூலதனத் தேவைகளை நிதி அணைக்குழு கூட்டுச் சுட்டெண்ணைப் பயன்படுத்தி சமத்துவ அடிப்படையில் கிடைரீதியான பங்காக ஒன்பது மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்துள்ளது .

கூட்டு சுட்டெண் மற்றும் மூலதனச்செலவு நிதிப் பகிர்வு

நிதி ஆணைக்குழு மாகாணங்களுக்கு நிதி பகிர்வு செய்வதற்காக குடித்தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து முன்னேற்றகரமான புள்ளிவிவர சூத்திரம் ஒன்றை உருவாக்கியது. அதன்படி, "காரணி பகுப்பாய்வு" என்று அழைக்கப்படும் ஒரு பன்முக புள்ளிவிபர நுட்பத்தை பயன்படுத்தி ஆணைக்குழுவால் மாகாணங்களிடையே மூலதன நிதியை ஒரு சீரான முறையில்

பகிர்வதற்கு ஒரு கூட்டு சுட்டெண்ணை பயன்படுத்தப்படுகிறது. இந்த கூட்டு சுட்டெண் பின்வரும் மாகாண மட்ட குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது

- நடு ஆண்டு சனத்தொகை
- மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி
- வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள் தொகை
- சராசரி மாதாந்த தலா வருமானம்
- ஒரு மருத்துவ அலுவலரிற்கான நபர்களளின் எண்ணிக்கை
- பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதியானவர்களின் எண்ணிக்கை

அட்டவணை - 07 : 2021 ஆம் ஆண்டிற்கான கூட்டுச்சுட்டெண்ணும் மூலதன நிதிபகிர்வுக்கான சதவீதங்களும்

மாகாணங்கள்	கூட்டுச்சுட்டெண்	மாகாண பங்கு (சதவீதங்கள்)
மேற்கு	0.71179	07.83 %
மத்திய	1.01822	11.21 %
தெற்கு	0.93367	10.28 %
வடக்கு	1.17468	12.93 %
வட மேற்கு	0.92328	10.16 %
வட மத்தி	1.03606	11.40 %
ஊவா	1.05958	11.66 %
சப்ரகமுவ	1.08216	11.91 %
கிழக்கு	1.14696	12.62 %

6.2. மீண்டெழும் செலவீன கொடைக்கான பரிந்துரையும் பகிர்வும்

ஒவ்வொரு மாகாண சபையினாலும் சமர்ப்பிக்கப்பட்ட மீண்டெழும் செலவுத் தேவைகள் குறித்து நிதி ஆணைக்குழு தனது விரிவான ஆய்வுக்குப் பின்பு, ஒவ்வொரு மாகாண சபையுடனும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பங்குபற்றலுடன் தேவையான மீண்டெழும் செலவுகளை மதிப்பிடுவதற்கு ஏற்பாடு செய்தது. மாகாண சபைகளின் மீண்டெழும் செலவினங்களுக்கான மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் மாகாண சபைகளின் மதிப்பிடப்பட்ட வருமானம் என்பன மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டு ஒவொரு மாகாண சபைக்குமான மதிப்பீட்டாய்வு செய்யப்பட்ட செலவீன தொகையிலிருந்து மதிப்பிடப்பட்ட வருவாய்கள் கழிக்கப்பட்டு அவற்றிற்கான தொகுதிக்கொடை பரிந்துரைக்கப்படுகிறது.

6.3 தேசிய வரவுசெலவு திட்டதிலிருந்து மாகாண சபைகளுக்கான கொடைகளை பரிந்துரை செய்தல்

மாகாண சபைகளின் மூலதனம் மற்றும் மீண்டெழும் பாதீட்டு தேவைகளை நிதி ஆணைக்குழு தேசிய பதீட்டு திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்துடன் இணைந்து மதிப்பீட்டாய்வு செய்துள்ளது. மதிப்பீட்டின் போது நாட்டின் பொருளாதார நிலைமை, நிதி நிலை மற்றும் அரசாங்கம் எதிர்கொள்ளும் பாதீட்டு மட்டுப்பாடுகள் ஆகியவை அதிக கவனத்தில் கொள்ளப்பட்டன.

பாதீட்டு மட்டுப்பாடுகளை மீண்டும் கருத்தில் கொண்டு மாகாண சபைகளுக்கான பிரமாண அடிப்படையிலான கொடைக்கான தொகையும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி கொடைக்காக

மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகைக்குள்ளேயே பரிந்துரைக்கப்படுகிறது. இறுதியாக நிதி ஆணைக்குழு கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அரசாங்க கொடைகளை பகிர்ந்தளிக்க பரிந்துரை செய்கிறது.

அட்டவணை – *08: 2021* ஆம் ஆண்டுக்காக மாகாண சபைகளிற்கு பரிந்துரைக்கப்படுகின்ற மூலதன மற்றும் மீண்டெழும் கொடைகள்

ரூ.மில்

மாகாண சபைகள்	மூலதனம்			மீண்டெழும்	மொத்தம்	%
	மா.குஅ. கொ(PSDG)	பி.அ.கொ (CBG)	வ.செ.கொ (RBG)	தொகுதி கொடை		
மேற்கு	5,512	591	849	60,481	67,433	16 %
மத்திய	7,892	847	282	44,518	53,539	13 %
தெற்கு	7,237	776	468	40,308	48,789	12 %
வடக்கு	9,103	976	396	31,550	42,025	10 %
வட மேற்கு	7,153	767	333	39,238	47,491	11 %
வட மத்தி	8,025	861	132	25,841	34,859	08 %
ஊவா	8,209	880	141	29,237	38,467	09 %
சப்ரகமுவ	8,385	899	177	34,295	43,756	10 %
கிழக்கு	8,884	953	222	35,161	45,220	11 %
மொத்தம்	**70,400**	**7,550**	**3,000**	**340,629**	**421,579**	**100 %**

07. சமச்சீரான பிராந்திய அபிவிருத்திக்கான பரிந்துரைகளினது வரையறைகள்

வள சொத்துக்களை உருவாக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிகின்ற பிராந்திய அபிவிருத்தி என்பது பிரேதேச ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான ஒரு முயற்சியாகும். எவ்வாறாயினும், நாட்டின் சில பகுதிகள் மிகவும் வளர்ச்சியடைந்து இருக்கும்போது, ஏனைய பிரதேசங்கள் வளங்கள் மற்றும் வசதிகள் இல்லாமையால் கடுமையாக பாதிக்கப்படுகையில் இந்த ஏற்றத்தாழ்வுகள் என்பது ஒரு முக்கியப் பிரச்சனையாகிறது. சில மாகாணங்கள் இயற்கை வளங்களால் நிறைந்தவையாக இருந்தாலும் அவை கிடைக்கின்ற வளங்களை பயன்படுத்த முடியாததால் அவை வறுமை நிலையிலேயே உள்ளன . சில நகர்ப்புற பகுதிகள் சிறந்த சேவைளை நன்கு அனுபவிப்பதுடன், உயர்தர வாழ்க்கைச் சூழல்களுக்கேற்ற வலுவான சமூக நிறுவனங்களையும் கொண்டிருக்கின்றபோது மாகாணங்களுக்குள் பல பின்தங்கிய பகுதிகள் காணப்படுகின்றன. இத்தகைய சிக்கலான சூழ்நிலைகள் குறிப்பாக சமூகமூலதனம், குடியியலமைப்பு, வாழ்க்கைமுறை விருப்பத்தெரிவுகள், தொழில் நுட்பங்கள் மற்றும் அரசியல் என்பவற்றில் சிக்கலான சூழ்நிலைக்கு வழிவகுக்கிறது.

சமச்சீரான பிராந்திய அபிவிருத்திக்கான பொறுப்புகள் அரசாங்கத்தின் அனைத்து நிலை மட்டங்களிலுமுள்ள பல நிறுவனங்களிடம் பரந்துகாணப்படுகின்றது. அரசியலமைப்பு ரீதியாக, மாகாணங்களும் உள்ளூராட்சி அதிகார சபைகளும் வளர்ச்சியடைந்த மற்றும் குறைவான வளர்ச்சியுடைய அவற்றின் புவியியல் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு பொறுப்புடயவையாக உள்ளன குறிப்பிட்ட பிராந்தியங்களுக்கு பொருளாதார மேற்கோள்கள் மிகவும் முக்கியமானதாக அமைவதுடன் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது சில பிரதேசங்களிலுள்ள பற்றாகுறைகள் என்பது அவற்றை பின்தங்கிய நிலையிலேயே தொடரச்செய்கின்றது.

இலங்கையின் பொருளாதார திட்டமிடலில் சமவளர்ச்சி என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், இந்த நோக்கத்தில் அது பெரிதாக முன்நகர்த்தப்பட வில்லை. உண்மையில் இவ் வழிமுறைகள் சில மாகாணங்களின் எதிர்பார்ப்பை எய்தவில்லை. தனியார் துறையில் புதிய முதலீடுகள் உட்கட்டமைப்பு அடிப்படை வசதிகளைக் கொண்ட பிரதேசங்களிலேயே அதிக கவனம் செலுத்துகின்றன. அவற்றின் சாத்தியவளங்கள் மற்றும் ஒப்பீட்டு நன்மைகளை புறக்கணிக்காது அபிவிருத்திக்கான போதிய முதலீடுகள் தேவைப்படுகின்றன.

வரையறைகள்

1. *நிதி ஆணைக்குழுவானது தேசிய பாதீட்டின் மொத்த தொகை மற்றும் அதில் துறைசார் உப தொகைகள் என்பவற்றை அறிந்திராத ஒரு நிலையிலேயே அதிகார பகிர்வின்வழி சமசீரான அபிவிருத்தியை இலக்காக கொண்டு மாகாணங்களிற்கு போதியளவு நிதியை பரிந்துரை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.*
2. *அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் இணைந்து செயலாற்றுகின்ற ஒத்தியங்கும் விடயங்கள் என்பவற்றிலான மாகாணசபைகளினது சேவை வழங்கல்களிற்கு பல்வேறு மூலங்களிலிருந்து நிதியீட்டம் செய்யப்படுகிறது.*
3. *மாகாண சபைகளினால் சமர்பிக்கப்படுகின்ற கோரிக்கைகள் அல்லது நிதி ஆணைக்குழுவினால் மதிப்பீட்டாய்வு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்படுபவை மாகாணங்களினது அல்லது மகணசபைகளினது மொத்த தேவைகளாக அமையாது ஏனெனில் அவற்றின் நிதியிடலுக்கான ஏனைய பகுதிகள் வேறு மூலங்களின் வழியில் எதிர்பார்க்கப்படுகின்றன.*
4. *நிதி ஆணைக்குழுவின் மதிப்பீட்டாய்வும் பரிந்துரைகளும் தனியார் துறை முதலீடுட்டு நடவடிக்கைகளையும் மாகாணங்களில் மத்திய அமைச்சுக்களின் நிகழ்ச்சி திட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை.*

5. மாகாண சபைகளினால் அபிவிருத்தி தேவைகள் ஒரு முறை சீராக மதிப்பிடப்பட்டு மூலதன நிதியின் கீழான நிதிஈட்டத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த மூலதன நிதித் தேவைகள் ஒரு ஒழுங்கு முறையில் மதிப்பிடப்பட்டிருந்தாலும் கூட பாதீட்டு மட்டுப்பாடுகள் உள்ளன என்ற வகையில் நிதி ஆணைக்குழு அத்தேவைகளை முழுமையாக கருத்தில் கொள்ள முடியவில்லை. மேலும் மாகாண சபைகளிற்கான. பிரமாணஅடிப்படையிலான கொடைகளும் மதிப்பீடு செய்யப்பட்ட PSDG தொகைக்குள்ளேயே சேர்க்கப்பட வேண்டியுள்ளது.

6. கடந்த காலங்களிலான மாகாண சபைகளின் செலவின பற்றாக்குறைகள் மூலதன கொடைகளின் மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

08. கொள்கை பரிந்துரைகள்

மாகாணங்களிடையே நிதியை பகிர்ந்து கொள்வதற்கான அடிப்படைகள் அதற்கான நியமங்கள் என்பவற்றுடனான மாகாண சபைகளிற்கான அரச கொடைகளின் பரிந்துரை என்பவற்றிற்கு மேலாக, நிதி ஆணைக்குழுவானது பொது முதலீட்டின் வினைத்திறன் மிக்க அமுலாக்கல் மற்றும் உபதேசிய மட்டத்தில் சேவை வழங்கல்கள் என்பவற்றுடனான சமத்சீரான பிராந்திய அபிவிருத்தி என்பதனை அடைந்து கொள்வதற்கான தனது கொள்கைப் பரிந்துரைகளையும் முன்வைக்கின்றது.

தேசிய பாதீடிலிருந்து நிதி ஒதுக்கீடுகள்,சமச்சீரான பிராந்திய அபிவிருத்தி, நிறுவனங்களின் உள்ளக ஒருங்கிணைப்பு அதிகார பகிர்வின் கீழான வருவாய் உருவாக்கங்கள் மற்றும்தனியார் துறை பங்களிப்புக்கள் என்ற பார்வையில் பின்வரும் பரிந்துரைகள் சமர்பிக்கப்படுகின்றன.

1. *செலவின பாதீடும் நிதி ஒதுக்கீடுகளும் ஒரு சிறப்பான சேவை வழங்கல்கள் முறையை பின்பற்றியதாக அமைய வேண்டும் என்பதுடன் மாகாணங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் இணைப்பொறுப்புடைய ஒத்தியங்கும் விடயங்கள் என்பவற்றிலான சேவை வழங்கல்களின் செலவு தேவைகளை பூர்த்தி செய்ய கூடியளவில் தேசிய பாதீடிளலிருந்து போதுமான நிதியை ஒதுக்க வேண்டும். தேசிய வரவுசெலவுத் திட்டமென்பது அதிகார பகிர்வு கட்டமைப்பு (பகிர்ந்தளிக்கப்பட்ட மற்றும் ஒத்தியங்கும்) அவ்வாறே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் SDG கட்டமைப்பு என்ற பார்வை கோணத்தினை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். மத்திய அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றுகிடையே நிதி ஒதுக்கீடுகளில் இரட்டிப்பு தன்மையை தவிர்த்து கொள்வதற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்க்ளிற்கான பாதீட்டு ஒதுக்கீடுகள் பாராளுமன்றத்திற்கு நேரடியாக வகை கூறுவதை உறுதி செய்து விசேட செலவீன அலகாக கருதி பாதீட்டு தலைப்புக்களினை உருவாக்கி மாகாண சபைகளிற்கே நேரடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.*

2. *நாட்டில் சமசீரான பிராந்திய அபிவிருத்தியை உறுதி செய்து கொள்ளும் வகையில், மத்திய அமைச்சுக்கள் ஒத்தியங்கும் விடயங்கள் தொடர்பிலான தமது அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகளை மாகாண சபைகள் மாவட்ட செயலகங்களுடன் இணைந்து வேலை திட்டங்களில் இரட்டிப்பினை தவிர்த்து மாகாணங்களிற்குள்ளே சமநிலையை பேணி குறித்த வருடதிற்கான ஒருங்கிணைந்த வருடாந்த அமுலாக்கல் திட்டத்தினை தயாரிக்க கூடிய வகையில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ள வேண்டும். தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கலந்தாலோசனயுடன் தொடர்புடைய தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் ஒப்பீடளவிலான சேவைகள், சமவாய்ப்பு என்பதற்க்காகவும் பிராந்திய ஏற்றதாழ்வுகளை குறைப்பதற்கும் உப தேசிய மட்டத்திலான நிதி ஒதுக்கீடுகளில் ஒரு சமநிலையினை உறுதி செய்து கொள்ள வேண்டும். பொது முதலீட்டு திட்டமும் தேசிய பாதீடும் பிரதேச ரீதியிலான சமத்துவமின்மை என்பதை கண்டுகொள்ளாமல் கூடியளவில் அபிவிருத்தி துறைகள் என்பதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றன.*

3. *கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சமூக அபிவிருத்தி மற்றும் ஏனைய உள்ளூராட்சி சேவைகள் போன்ற பாரியளவிலான வேலை நடவடிக்கைகள் உள்ளூராட்சி மன்றங்களினால் அவர்களிற்குரிய சேவைகளாக நடைமுறைப்படுத்தபட்டு வருகின்றன. இவ்வாறான நிலைமைகள் இவ்விடயங்களிற்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகள் வேறு நிறுவனங்களிற்கு ஒதுக்கபடுவது நிறுத்தப்பட வேண்டும். மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் உள்ளூர் மட்டத்தில் இடர் அனர்த்த நடவடிக்கைகளிலும் அவற்றின் தடுப்பு நடவடிக்கைகளிலும் சமூக மட்ட தலையீடுகளுடன் ஈடுபடுகின்றன. உள்ளூராட்சி சேவை வழங்கல்களிற்கென ஒரு விசேட மூலதன கொடையையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளிற்காக ஒரு தொகை ஒதுக்கீட்டையும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நியமங்களின் அடிப்படையில் மாகாண சபைகளிற்கு தேசிய பாதீட்டிலிருந்து வழங்குவதை கவனத்தில் கொள்ளலாம்.*

4. அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களிலான விசேட கருத்திட்டங்கள் தேசிய நிகழ்ச்சி திட்டங்கள் மாகாண சபைகளினூடாக அமுல்படுத்தப்பட வேண்டும். உபதேசிய மட்டங்களில் தேவைகளை மதிப்பிடவும் அவற்றை அமுல்படுத்தவும் மத்திய அமைச்சுகளிடம் வளங்கள் இல்லாதிருப்பதால் இது போன்ற கருத்திட்ட தேவைகள் மாகாண சபைகள் மற்றும் நிதி ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து அடையாளங் காணப்பட வேண்டும்.

5. பொதுச் சேவைகளில் பயன்மிக்க வினைத்திறனுடைய ஏற்பாடுகள் மற்றும் வளர்ந்துவரும் தேவைகளிற்கான தரம், அணுகுதல், பெறுமதி இரட்டிப்புத்தன்மை என்பவை முக்கியமாகிறது மாகாணங்களிற்குள்ளே சமசீரான பிராந்திய அபிவிருத்தியினை அடையும் பொருட்டு ஒப்பீட்டளவிலான சேவைகளிற்கும் சமூக பொருளாதார முன்னேற்றங்களிற்கும் சேவை வழங்கல்கள் நிறுவனங்களால் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள சேவை வாய்ப்புக்கள் குறைந்த கிராமபுறங்களுக்கு பொருத்தமான அபிவிருத்தி முயற்சிகள் இணங்காணப்பட வேண்டும். முக்கிய செயற்திறன் வாய்ந்த துறைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்ற அதே வேளையில் மனித அபிவிருத்திக்கு உதவக்கூடியதும் சமுகத்திற்கு அடிப்படை தேவைகளை வழங்குகின்ற கட்டாயமான சிறிய துறைகளிற்கு ஒரு குறைந்தபட்ச செலவீடுகளை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

6. வினைத்திறன் மிக்க வருவாய் முகமைத்துவத்துக்கான ஊக்குவிப்புத்தொகை, முறையான ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வுகளை அதிகரித்தல் என்பவற்றினூடாக மாகாண சபைகளிற்கும் உள்ளூராட்சி மன்றங்களிற்கும் வருமான உருவாக்கங்கள் நிதி உருவாக்கங்களிற்கான புதிய மார்கங்கள் இனம்காணப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு அரசிறை கொள்கை திணைக்களத்தின் தீவிர ஈடுபாடு எதிர்பார்க்கப்படுகிறது. அரசியலமைப்பில் மாகாண சபைகளிற்கென பட்டியலிடப்பட்ட வருமான மார்கங்களிலிருந்து மாகாண சபைகள் வருவாய்களை உருவாக்குவதை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். அத்துடன் தேசிய வருவாய் சேகரிப்புக்களிளிருந்து போதியளவு பங்கினை மாகாணசபைகளிற்கு மாற்றல் செய்யப்பட வேண்டும். தமது சொந்த உயர் வருவாய் உருவாக்கல் என்ற கோணத்தில் உப தேசிய மட்ட சபைகளினை பலப்படுத்துவதன் மூலம் மாகாண சபைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் அரச கொடைகளை பெற்றுகொண்டிருக்கின்ற தங்கியிருக்கும் தன்மை படிப்படியாக குறைக்கப்பட வேண்டும். இது அரச நிதி மீதான அழுத்தங்களை குறைக்கின்ற வகையில் அரசாங்கதிற்கு உதவுவதாக அமையக்கூடும்.

7. தற்போது மாகாண சபைகளிற்கென போதிய ஒதுக்கீடு இன்றி "பிராந்திய அபிவிருத்தி" என்ற பாதீட்டு வழியில் மாகாண சபைகளிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. மாகாண சபைகளின் துறைகளிற்கு பிராந்திய அபிவிருத்தி என்றதொரு பாதீட்டு வழியில் நிதி ஒதுக்கீடு செய்வதானது மாகாண சபைகளின் சேவை வழங்கலிற்கான தேவைப்பாடுகளை குறைத்து மதிப்பிடுவதாக அமைகிறது. விசேடமாக கல்வி மற்றும் சுகாதார துறைகளை குறிப்பிடலாம். குறிப்பாக கல்வி துறையில், 90 % மான மாணவர்கள் மாகாண பாடசாலைகளிலேயே உள்ளனர் என்பதுடன் இந்த நிலைமை சுகாதார துறைக்கும் பொருந்தும். ஆகவே கல்வி சுகாதார துறைக்கான போதிய நிதி ஏற்பாடுகள் மாகாண சபைகளிற்கு உள்ளடக்கப்படவேண்டும்.

8. சிறந்த பெறுபேறுகள் மற்றும் தாமதங்கள் இரட்டிப்புக்களை தவிர்த்தல் என்பவற்றை இலக்காக கொண்டு பொதுத்துறை முதலீடுகள் தொடர்பில் ஒரு நெறிப்படுத்தப்பட்ட செயல்முறையில் சகல பொதுத்துறை நிருவனங்களாலும் திட்டமிடல், பாதீடு செய்தல், அறிக்கையிடல் என்பவற்றில் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடனான ஒரு பொது கட்டமைப்பு பின்பற்றப்பட வேண்டும். இந்நோக்கதிற்காக, ஒரு சுயாதீனமான திட்டமிடல் முறை விரும்பத்தக்கது. சுமூகமான நிதி வளப்

பாய்ச்சல்கள்களுடனும் ஸ்திரமான அறிக்கையிடல் முறையுடனும் கூடிய ஒரு வினைத்திறன் மிக்க உள்ளார்ந்த அரச நிதி உறவுகள் இருப்பது கட்டயமாகிறது.

9. தேசிய பாதீட்டில் நிதி அழுத்தங்களை குறைப்பதற்கும் சேவை வழங்கல்களின் வினைத்திறனை முனேற்றுவதற்கும் நெறிமுறை அடிப்படையிலான பாதீடு மற்றும் தொழில் நுட்பங்களை உள்வாங்குதல் என்பது கட்டாயமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இவை விசேடமாக கல்வி சுகாதார துறைகளில் கற்பித்தல் மற்றும் ஏனைய தொடர்புடைய சேவைகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

10. தேசிய மற்றும் உபதேசிய மட்டத்திலான செலவீனங்களிற்கிடையேயான தொடர்புகள் மற்றும் பொருளாதார வளர்சியுடனான அதன் தொடர்புகள் பற்றிய தெளிவான புரிதல்கள் நாட்டிற்கு சிறந்த முடிவுகளை எடுக்க அரசாங்கத்திற்கு உதவியாக அமையும். இது தொடர்பில் தனியார் துறைமுதலீடுகள் என்பது புறக்கணிக்கப்பட முடியாதது. சம அபிவிருத்தி மற்றும் துறை சார் முன்னேற்றங்கள் என்பவற்றிற்காக தரமான சேவை வழங்கல்கள் சிறந்த விளைவுகளை உறுதி செய்து கொள்வதற்கு பொதுத்துறை முதலீடுகள் குறிப்பிட்ட துறைகளிலும் பிராந்தியங்களிலும் உள்ளார்ந்த ரீதியாக கிடைக்கத்தக்க தனியார் துறை முதலீடுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எமது மதிப்பீட்டாய்வும் பரிந்துரைகளும் பொது நிதி அம்சங்கள், சமச்சீரான பிராந்திய அபிவிருத்தியை கவனத்தில் கொண்ட மாகாணங்களின் தேவைகள் மற்றும் பாதீட்டு மட்டுப்பாடுகள் என்பவற்றை கருத்தில் கொண்டுள்ளது. நாங்கள் பாதீட்டு பரிந்துரைகளை செய்வதில் உள்ள மட்டுப்பாடுகளை குறிப்பிட்டு காட்டுவதுடன் மற்றும் பயன்மிக்க வகையில் நடைமுறைப் படுத்துவதற்கான கொள்கைப்பரிந்துரைகள் என்பவற்றையும் முன்னிலைப்படுத்தியுள்ளோம். நாங்கள் இந்தப் பரிந்துரைகளை தங்களது உயர்வான கவனத்துக்கு சமர்பிக்கின்றோம்

U.H. பளிஹகார
தலைவர்

பேராசிரியர் W.D. லக்ஷ்மன்
பதவிவழி அங்கத்தவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

S.R. ஆட்டிகல
பதவிவழி அங்கத்தவரும் திறைசேரி செயலாளரும்

V. கனகசபாபதி
நியமன அங்கத்தவர்

H.M. சப்ருல்லாஹ்
நியமன அங்கத்தவர்

இணைப்பு – 01

***2020, 2021* ஆம் ஆண்டுகளில் மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட கொடைகளுக்கான தேவைகள்**

ரூ.மில்

மாகாணங்கள்	2020	2021
மேற்கு		
மூலதன	6,172	13,530
மீண்டெழும்	82,547	81,178
மொத்தம்	88,719	94,708
மத்திய		
மூலதன	14,475	17,894
மீண்டெழும்	48,912	49,679
மொத்தம்	63,387	67,573
தெற்கு		
மூலதன	12,780	9,564
மீண்டெழும்	42,433	45,269
மொத்தம்	55,213	54,833
வடக்கு		
மூலதன	14,640	21,422
மீண்டெழும்	33,233	34,476
மொத்தம்	47,873	55,898
வடமேற்கு		
மூலதன	9,126	12,181
மீண்டெழும்	44,444	44,434
மொத்தம்	53,570	56,615
வடமத்தி		
மூலதன	6,968	10,255
மீண்டெழும்	28,033	27,906
மொத்தம்	35,001	38,161
ஊவா		
மூலதன	12,029	10,101
மீண்டெழும்	30,298	30,667
மொத்தம்	42,327	40,768
சபரகமுவ		
மூலதன	7,328	14,287
மீண்டெழும்	39,107	37,636
மொத்தம்	46,435	51,923
கிழக்கு		
மூலதன	18,619	22,971
மீண்டெழும்	36,149	38,591
மொத்தம்	**54,768**	**61,562**

மூலம்:நிதி ஆணைக்குழு

இணைப்பு - 02

2021 ஆம் ஆண்டுக்கான மூலதன கொடை பகிர்வு சூத்திரம், முறை மற்றும் தரவு மாறிகள்

மாகாணங்களிற்கான நிதி ஒதுக்கீடு பலதரப்பட்ட நியமங்கள் மற்றும் பிரமாணங்களினடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. மூலதன நிதியை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்து கொள்வதற்கான புள்ளிவிபர முறைமையொன்றினை வடிவமைக்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தரவு மாறிகளை கொண்டசூத்திரத்தை பயன்படுத்தி ஒரு கூட்டுச் சுட்டெண் உருவாக்கப்பட்டது. ஒரு தனித்த குறிகாட்டியினால் நேரடியாக அளவிடப்பட முடியாத விடயங்களான நாடுகளை மதிப்பிட்டு வரிசை படுத்தல், பிரதேசங்கள் அல்லது நிறுவனங்களின் தரம்,முன்னேற்றம் மற்றும் ஏனைய சிக்கலான விடயங்களுக்கு பொருத்தமான கருவியாக பல பரிமாணங்களை கொண்ட கூட்டுக் குறிகாட்டிகள் அமைகின்றன.

குடித் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் உதவியுடன் நிதி ஆணைக்குழு மாகாணங்களிடையே மூலதன கொடைகளைபகிர்ந்து கொள்வதற்கு ஒரு கூட்டுச் சுட்டெண்ணினை பயன்படுத்துகிறது. நிறுவனங்களின் கலந்துரையாடல்கள் அவர்களது கருத்துக்களிற்கேற்ப பின்வரும் ஆறு தரவு மாறிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த நிதிப்பகிர்வு சூத்திரத்தில் உள்வாங்கப்பட்டன.

- *நடு ஆண்டு சன தொகை*
- *மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி*
- *வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள் தொகை*
- *சராசரி மாதாந்த தலா வருமானம்*
- *ஒரு மருத்துவ அலுவலரிற்கான நபர்களளின் எண்ணிக்கை*
- *பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதியானவர்களின் எண்ணிக்கை*

இந்த மாறிகளுக்கான மாகாண தரவுகள் குடித் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றிலிருந்து பெறப்பட்டன.

கூட்டுச் சுட்டெண்ணினை உருவாக்குவதற்காக காரணிப்பகுப்பாய்வு எனப்படும் பல் தரவு புள்ளிவிபர நுட்பம் பயன்படுத்தப்பட்டது. காரணிப்பகுப்பாய்வு என்பது சமூகபொருளாதார ,தரநிலை, உணவு முறை,அல்லது உளவியல் அளவு போன்ற சிக்கலான விடயங்களில் காரண உறவுகளை பகுப்பாய்வு செய்வதற்கான பயன்மிக்க கருவியாக பயன்படுத்தப்படுகிறது. இது நேரடியாக அளவிட முடியாத விடயங்களில் அவற்றுடன் தொடர்புடைய பல தரவு மாறிகளை புரிந்துகொள்ளக்கூடிய அடிப்படை காரணியாக மாற்றம் செய்து ஆராய இடமளிக்கிறது .

சில தரவு மாறிகள் அல்லது அதிக தேவைக்கு அதிக பெறுமதியளிக்கின்ற ஒருவழிப்பட்டதாகும் பொருட்டு 100 இனால் கழிக்கின்ற வகையில் சீர் செய்யப்பட்டன. அத்தகைய சீராக்கல்கள் பின்வருமாறு உள்ளன.

தரவு மாறிகளின் சீராக்கல்கள்

தரவு மாறிகள்	தரவு மாறிகளின் சீராக்கல்கள்
நடு ஆண்டு சன தொகை	மாற்றமில்லை
மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி	1 / மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி
வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்கள் தொகை	மாற்றமில்லை
சராசரி மாதாந்த தலா வருமானம்	1 / சராசரி தலா வருமானம்
ஒரு மருத்துவ அலுவலரிற்கான நபர்களளின் எண்ணிக்கை	1 / மருத்துவ அலுவலரிற்கான நபர்கள்
பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதியானவர்களின் எண்ணிக்கை	100 - பல்கலைக்கழக விஞ்ஞான கற்கைகளிற்கு தகுதியானவர்களின் எண்ணிக்கை)

இந்த காரணி பகுப்பாய்வின் கீழ், 75% இற்கும் மேலான உண்மை நிலைபாடுகள் தனி காரணிகளால் வெளிப்படுத்தப்பட்டது. அந்த காரணிகளின் கீழ் ஒவ்வொரு மாகாணங்களிற்குமான ஒரு சுட்டெண் கணக்கிடப்பட்டது. இவை காரணி மதிப்பெண்கள் என அறியப்படுகின்றன .ஆனால் அவற்றின் பெறுமதிகள் நேர் மற்றும் எதிர்மறை வடிவங்களில் காணப்பட்டன. இறுதி சுட்டெண் என்பது எதிர்மறை வடிவிலல்லாது அமைய வேண்டும்.

எதிர்மறையில்லாத பெறுமதிகளை பெற்றுக்கொள்ள ஒவ்வொரு மாகாணத்துக்குமான கூட்டுச் சுட்டெண் பின்வரும் கணித முறையை கையாண்டு பெற்றுக்கொள்ளப்பட்டது.

$$CI = \left\{ n^{\left(\frac{1}{n}\right)} \right\}^{fs}$$

CI : கூட்டுச் சுட்டெண்

n : மாதிரி எண்ணிக்கை (மாகாணங்களின் எணிக்கை -09)

fs : காரணி மதிப்பெண்கள்

இறுதியாக ஒரு மாகாணத்திற்கான கூட்டுச் சுட்டெண் பெறுமதி ஒன்பது மாகாணங்களின் கூட்டுச் சுட்டெண் மொத்த பெறுமதியில் வகுக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்தினதும் விகிதம் கணக்கிடப்பட்டது. மாகாணங்களின் ஒதுக்கீடுகளிற்கான கணக்கீட்டுமுறை கீழே காட்டப்பட்டுள்ளது .

மாகாணங்கள்	காரணி மதிப்பெண்	கூட்டுச் சுட்டெண்(எதிர் மறையின்றி)	ஒதுக்கீட்டிற்கான சதவிகிதம்
மேற்கு	-1.39256	0.71179	7.83
மத்திய	0.07397	1.01822	11.21
தெற்கு	-0.28111	0.93367	10.28
வடக்கு	0.65946	1.17468	12.93
வட மேற்கு	-0.32696	0.92328	10.16
வட மத்தி	0.14509	1.03606	11.40
ஊவா	0.23704	1.05958	11.66
சப்ரகமுவ	0.32342	1.08216	11.91
கிழக்கு	0.56164	1.14696	12.62
		9.1	**100.00**

மூலம்: நிதி ஆணைக்குழு

இணைப்பு -03

***2020 , 2021* ஆம் ஆண்டுகளின் கொடைகலளிற்கான நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள்**

ரூ.மில்

மாகாணம்	மீண்டெழும் தொகுதி கொடை	மூலதன			மொத்தம்
		மா.கு.ஒ.அ.கொ (PSDG)	பி.அ.கொ.(CBG)	வ.செ .கொ (RPG)	
மேற்கு					
பரிந்துரைகள் 2020	58,533	7,047	704.70	849	67,134
பரிந்துரைகள் 2021	60,481	5,512	591.00	849	67,433
மத்திய					
பரிந்துரைகள் 2020	45,455	10,089	1,008.90	282	56,835
பரிந்துரைகள் 2021	44,518	7,892	847.00	282	53,539
தெற்கு					
பரிந்துரைகள் 2020	38,324	9,252	925.20	468	48,969
பரிந்துரைகள் 2021	40,308	7,237	776.00	468	48,789
வடக்கு					
பரிந்துரைகள் 2020	32,383	11,637	1,163.70	396	45,580
பரிந்துரைகள் 2021	31,550	9,103	976.00	396	42,025
வட மேற்கு					
பரிந்துரைகள் 2020	40,448	9,144	914.40	333	50,839
பரிந்துரைகள் 2021	39,238	7,153	767.00	333	47,491
வட மத்தி					
பரிந்துரைகள் 2020	26,473	10,260	1,026.00	132	37,891
பரிந்துரைகள் 2021	25,841	8,025	861.00	132	34,859
ஊவா					
பரிந்துரைகள் 2020	30,423	10,494	1,049.40	141	42,107
பரிந்துரைகள் 2021	29,237	8,209	880.00	141	38,467
சபரகமுவா					
பரிந்துரைகள் 2020	35,786	10,719	1,071.90	177	47,754
பரிந்துரைகள் 2021	34,295	8,385	899.00	177	43,756
கிழக்கு					
பரிந்துரைகள் 2020	34,680	11,358	1,135.80	222	47,396
பரிந்துரைகள் 2021	35,161	8,884	953.00	222	45,220
மொத்தம்					
பரிந்துரைகள் 2020	**342,505**	**90,000**	**9,000**	**3,000**	**444,505**
பரிந்துரைகள் 2021	**340,629**	**70,400**	**7,550**	**3,000**	**421,579**

மூலம்: நிதி ஆணைக்குழு

இணைப்பு – 04

2020 2021 இல் துறைகளுக்கான மதிப்பீட்டாய்வு செய்யப்பட்ட மாகாண மூலதன கொடைகளின் பகிர்ந்தளிப்பபு

இல	துறைகள்	மாகாண மூலதன கொடையின் பங்கு %	
		2020	2021
1	கல்வி.	16.35	13.63
2	மேலைத்தேச மருத்துவம்	14.90	18.65
3	சுதேச மருத்துவம்	3.64	2.82
4	விளையாட்டு	1.56	0.76
5	சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு	2.18	0.86
6	சமூக சேவைகள்	1.42	0.92
8	கலாசார மற்றும் சமய அலுவல்கள்	0.88	0.66
7	சிறுவர் பராயகால அபிவிருத்தி	0.50	0.45
9	வீடமைப்பு	1.01	0.95
10	கூட்டுறவு அபிவிருத்தி	0.46	0.75
11	மாகாண வீதிகள்	13.94	18.24
12	தோட்ட உட்கட்மைப்பு	0.79	0.81
13	போக்குவரத்து	1.21	0.93
14	காணி அபிவிருத்தி	0.49	0.19
15	விவசாயம்	5.72	3.74
16	கால்நடை வளர்ப்பு	3.53	2.26
17	நன்னீர் மீன் வளர்ப்பு	1.37	0.71
18	நீர்ப்பாசனம்	4.34	4.40
19	கிராமிய அபிவிருத்தி	1.64	1.26
20	சிறு கைத்தொழில்	1.93	1.10
21	கிராமியமின்னினப்பு	0.61	0.38
22	உல்லாசத்துறை	2.57	1.89
23	கிராமியமின்னினப்பு	8.96	13.80
	கிராமிய அபிவிருத்தி மற்றும் நெகிழ்வு தொகைக்கான கொடை	10.00	10.00
	மொத்தம்	**100.00**	**100.00**

மூலம்: நிதி ஆணைக்குழு

*நிதி ஒதுக்கீட்டின் பகிர்ந்தளிப்பு மொத்தகொடை மற்றும் முன்னுரிமைகள் அடிப்படையில் திருத்தத்திற்கு உட்பட்டது

இணைப்பு – 05

***2020, 2021* இல் மொத்த அனுமதிக்கப்பட்ட ஆளணி மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிக்கொடை**

மாகாணம்	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட ஆளணி		பரிந்துரைக்கப்பட்ட தொகுதி கொடை ரூ.மில்	
	2020	**2021**	**2020**	**2021**
மேற்கு	63,111	63,874	58,533	60,481
மத்திய	50,744	50,128	45,455	44,518
தெற்கு	46,551	46,433	38,324	40,308
வடக்கு	36,148	35,999	32,383	31,550
வட மேற்கு	47,541	47,973	40,448	39,238
வட மத்தி	29,887	29,992	26,473	25,841
ஊவா	33,054	33,181	30,423	29,237
சப்ரகமுவ	37,703	37,879	35,786	34,295
கிழக்கு	37,900	37,715	34,680	35,161
மொத்தம்	**382,639**	**383,174**	**342,505**	**340,629**

மூலம்: நிதி ஆணைக்குழு

2020, 2021 ஆம் ஆண்டின் மூலங்கள் வரியாக மாகாண வருமான சேகரிப்பு

மாகாணம்	பகிர்ந்தளிக்கப்பட்ட மூலங்கலிளிருந்தான வருமான சேகரிப்பு ('000)						
	புரள்வு வரி*	மோட்டார் வாகன வருமான உரிம கட்டணம்	கலால் வரி	முத்திரை கட்டணம்	நீதிமன்ற அபராதம்	ஏனையன **	மொத்தம்
மேற்கு							
2018	846	4,244,750	649,350	17,284,580	955,860	2,313,894	**25,449,280**
2019	572	4,318,610	672,570	13,488,510	1,280,040	2,226,398	**21,986,700**
மத்திய							
2018	1,636	963,025	424,991	1,845,477	97,068	527,808	**3,860,005**
2019	3,740	985,086	409,601	1,540,246	122,319	616,116	**3,677,108**
தெற்கு							
2018	985	1,251,751	132,947	2,003,469	472,295	517,982	**4,379,429**
2019	1,588	1,236,625	131,688	1,949,820	514,140	745,895	**4,579,756**
வடக்கு							
2018	-	378,372	35,255	798,260	177,033	394,602	**1,783,522**
2019	-	378,712	35,077	789,388	270,282	516,783	**1,990,242**
வட மேற்கு							
2018	7,804	1,396,531	151,058	1,913,484	444,571	503,591	**4,417,039**
2019	6,606	1,441,034	142,629	1,862,417	404,902	820,394	**4,677,982**
வட மத்தி							
2018	792	604,011	64,313	167,162	237,681	600,336	**1,674,295**
2019	941	631,364	60,775	149,577	312,784	535,263	**1,690,704**
ஊவா							
2018	1,060	451,897	97,824	349,821	213,478	357,462	**1,471,542**
2019	202	464,110	113,380	331,998	162,484	317,266	**1,389,440**
சபரகமுவ							
2018	-	768,347	119,509	320,364	192,348	333,878	**1,734,446**
2019	861	791,176	114,417	1,212,826	223,940	377,192	**2,720,412**
கிழக்கு							
2018	-	495,604	124,822	526,221	154,374	283,790	**1,584,811**
2019	-	523,795	83,580	469,163	222,495	223,799	**1,522,832**
மொத்தம்							
2018	**13,123**	**10,554,288**	**1,800,069**	**25,208,838**	**2,944,708**	**5,833,343**	**46,354,369**
2019	**14,510**	**10,770,512**	**1,763,717**	**21,793,945**	**3,513,386**	**6,379,106**	**44,235,176**

மூலம் : மாகாண சபைகளின் மாதாந்த வருமான அறிக்கை -2018

** 2010 வரையான முடிவடைந்த புரள்வு வரியின் சேகரிப்பு ** வாடகை, வட்டி, பரிசொதனைக்கட்டணம், மூலதன சொத்துக்களின் விற்பனை, பந்தய வரி முதலியன ஏனையவற்றில் உள்ளடங்கியுள்ளன.*

உப தேசிய மட்டத்திலான நிதிப் பாச்சல்கள்



மூலம் : திரு. அசோக S. குணவர்தன

இணைப்பு – 08

2012-2018 களில் பெயரளவிலான மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி

மாகாணம்/ஆண்டு	2012	2013	2014	2015	2016	2017	2018
மேற்கு	3,244	4049	4295	4365	4541	5,086	5,526
மத்திய	776	1,004	1,089	1,161	1,278	1,622	1,700
தெற்கு	834	968	1,033	1,105	1,188	1,348	1,432
வடக்கு	278	324	407	453	541	550	584
வட மேற்கு	760	1,046	1,112	1,163	1,280	1,478	1,584
வட மத்தி	379	490	561	645	706	755	817
ஊவா	362	500	563	610	856	776	824
சப்ரகமுவ	467	667	732	825	973	1,054	1,090
கிழக்கு	478	544	568	624	633	749	810
மொத்தம்	**7,579**	**9,592**	**10,361**	**10,951**	**11,996**	**13,418**	**14,366**

மூலம்: மத்திய வங்கி